Registered as a Newspaper

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
(பட்டுச் சேலைகளின் காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2.50

ஜவுளி வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி !
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஹூ பங்குனி மீ 23 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 26 (05 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-102

## ஜே. வி. பியின் பகிஷ்கரிப்பு வாரம் இன்று ஆரம்பம்

# ஹர்த்தாலை முறியடிப்பதில் அரசு பகீரதப் பிரயத்தனம்

## கொழும்பில் மூலைமுடுக்கு எங்கும் படையினர் உஷார் நிலையில்

கொழும்பு, ஏப்ரல். 5

ஜே. வி. பியின் ஹர்த்தால் வாரம் இன்று ஆரம்பமாகிறது. இந்த ஹர்த்தாலை முறியடிக்கும் முயற்சியில் இலங்கை அரசு பகீரதப் பிரயத்தனத்துடன் ஈடுபட்டு வருகிறது.

கொழும்பு நகரில் எந்த அசம்பாவிதங்களையும் சமாளிக்கக்கூடியதாக - நகரில் மூலை முடுக்கு எங்கும் - முப்படையினர் உசார் நிலையில் நேற்றிலிருந்தே வைக்கப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு நகரின் எல்லாப் பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படையினர் நேற்றிலிருந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அரச அலுவலங்கள், தனியார் நிறுவனங்கள் அனைத்திலும் பாதுகாப்புப் படையினர் காவலுக்கு நின்றதை நேற்றுக்காண முடிந்தது.

போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் பஸ்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு படையினர் வீதம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை தியணைக்கும் வாகனங்கள், அவசர தேவை

[8 ஆம் பக்கம் பார்க்க]

## அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்

சென்னை, ஏப். 5

சபாநாயகரின் உத்தரவை மீறியதால் அ. மு. க. எம், எல். ஏக்கள் நேற்றும் மீண்டும் தமிழ்நாடு சட்ட சபைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

1986 - 87 ஆம் ஆண்டு விடமைப்பு வாரியம் சம்பந்தமான அறிக்கை ஒன்றை முதலமைச்சர் வாசிக்கத் தொடங்கியவுடன், அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க் குரல் எழுப்பினர். இதைத் தொடர்ந்து சபையில் சிறு சலசலப்பு ஏற்பட்டது.

சபாநாயகர் தலையிட்டு அ. தி. மு. க. எம். எல். ஏக்களை எச்சரித்தார்.

ஆசனத்தில் அமரவேண்டும்; அல்லது சபையைவிட்டு வெளியேற வேண்டும்- இப்படி சபாநாயகர் உத்தரவிட்டார்.

இதற்கு அவர்கள் பணிய மறுத்தனர் சபாநாயகர் அவர்களை வெளியேற்றும்படி அவைக் காவலரைப் பணித்தார்.

காவலர்கள் வந்து உறுப

(8ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சிப் பகுதி மக்களின்

## அடகு நகைகள் மீளளிப்பு அடுத்த வாரமளவில்

யாழ்ப்பாணம், ஏப்.5

பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறைப் பகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகுவைக்கப்பட்ட நகைகள் அடுத்த வாரமளவில் மீளளிக்கப்படவுள்ளன.

மீளளிக்கப்படவுள்ள நகைகள் தற்பொழுது யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், அவற்றை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை வங்கி வட்டாரங்கள் துரிதகதியில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-10]

## வங்கிகளும், செயலகமும் நேற்று இயங்கின

யாழ். மாவட்டத்தின் வங்கிக் கிளைகள் நேற்று மீண்டும் இயங்கின. யாழ். செயலகமும், அதன் தொடர்புடைய ஏனைய பிரிவுகளும் செயற்பட்டன.

வங்கிகளில் படையினரின் பாதுகாப்பு இல்லாததன் காரணமாக பணப் புழக்கம் நிறுத்தப்பட்டிருந்தது.

வங்கிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே மீண்டும் பணப் புழக்கம் ஏற்படுத்தப்படும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-10)

## ஆங்கில மருந்துகள் மீதான இறக்குமதித் தீர்வை ரத்து

கொழும்பு, ஏப் 5

ஆங்கில மருந்துகள் மீதான இறக்குமதித் தீர்வையும் விற்பனை வரியும் ரத்துச் செய்யப்பட்டு விட்டன.

ஜனாதிபதி பிரேமதாஸ இது சம்பந்தமான உத்தரவை நேற்று வெளியிட்டார்.

மருந்துகளின் விலைகளைக் குறைக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆங்கில மருந்துகள் மீது 5 சதவீத இறக்குமதி தீர்வையும் ஒரு சதவீத விற்பனை வரியும் விதிக்கப்பட்டு வந்தது.

ஜனாதிபதி நேற்று விடுத்த உத்தரவைத் தொடர்ந்து வரி விலக்கை உடனடியாக அமுலுக்குக்கொண்டு வரும்படி

[8ஆம் பக்கம் பார்க்க]

## மருந்து விலை குறைப்பு

கொழும்பு, ஏப்ரல் 5

இறக்குமதி செய்யப்படும் ஆங்கில மருந்துகளின் விலை 18 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.

நேற்று மாலை மருந்து இறக்குமதியாளர்களுடன் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ரணவீர நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து, இந்த விலை குறைப்பு அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### முச்சந்தி முரளி



அப்ப உவை அ. தி. மு. க. காரர் சட்டசபையிலிருந்து வெளியேறுகிறதுக்கு, எண்டு தான் எம். எல். ஏக்களாய் வந்தவை போலை ......! இல்லையே ... ... ?

## பிரேமாவின் அழைப்பை ஜே.வி.பி. நிராகரித்தது

லண்டன், ஏப்ரல் 5

வன்முறைகளை ஜே வி.பி. இயக்கம் கைவிட்டால் நாடாளுமன்றத்தில் அவ்வியக்கத்துக்கு ஆசனங்களை விட்டுத்தர தனது அரசு தயார் என ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா விடுத்த அறிவிப்பை ஜே. வி. பி. இயக்கம் நிராகரித்திருக்கிறது.

திரு. பிரேமதாஸா சட்ட விரோதமான அரசின் பிரதிநிதி என்றும்—

ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுவதற்காக தேர்தலில் பெரும் தில்லு முல்லுகள் செய்தது என்றும்—

வடக்கு, கிழக்கில் இந்தியப் படையினரை அனுமதித்தல் மூலம் இலங்கை அரசு நாட்டுக்குப் பெரும் துரோகம் இழைத்து விட்டது என்றும் ஜே.வி.பி. இயக்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## சிறிமாவின் மகள் சந்திரிகாவும் எம்.பியானார்

கொழும்பு, ஏப். 5

ஐக்கிய சோஷலிச அணியின் தேசியப் பட்டியல் மூலம் ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க எம் பியாக நியமிக்கப்பட்டார்.

46 வயதான திருமதி சந்திரிகா குமாரணதுங்க எதிர்க் கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வியும் சுதந்திரக் கட்சி எம். பியான திரு. அனுராபண்டாரநாயக்காவின் அக்காவும் ஆவார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவையே முதலில் தேசியப் பட்டியல் மூலம் ஐக்கிய சோஷலிச முன்னணி எம். பியாக நியமனம் செய்தது.

அவர் காலமாகவே அவரது இடத்துக்கு திருமதி சந்திரிகா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கணவர் திரு. விஜயகுமாரணதுங்கா கொலை செய்யப்பட்ட பின்னர் திருமதி சந்திரிகா ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவின் இடத்துக்கு திரு. பேர்னட் சொய்சா நியமிக்கப்படுவார் என முன்னர் ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. [உ-எ]

### சுபநேரம்

05 - 04 - 1989
பங்குனி - 23
புதன்கிழமை
சுபநேரம்:
4 - 39 முதல் 6 - 09 வரை
ராகுகாலம்:
12 - 09 முதல் 1 - 34 வரை
அமாவாசை விரதம்

## முக்கிய இராணுவ மையங்களைத் தவிர்த்து

# இந்திய இராணுவ முகாம்களை வடக்கு, கிழக்கில் மூடவேண்டும்

### இந்தியத் தூதுவரிடம் கூறியதாக பாலகுமாரன் தகவல்

கொழும்பு, ஏப் 5

வடக்கு, கிழக்கில் பரந்துபட்டிருக்கும் இந்திய இராணுவ முகாம்களை மூடி, படையின் முக்கிய மையங்களுக்கு மட்டும் திருப்பிவிடவேண்டும்.

—இப்படிக் கூறினார் ஈரோஸ் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

''கொழும்பில் இந்தியத் தூதருடன் நீங்கள் என்ன பேசினீர்கள்?'' என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் கூறியதாவது:-

எமக்கு மக்கள் கொடுத்த ஆணையின்படி மக்களின் சில கருத்துக்களை, எண்ணங்களை செயற்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கிறது.

இதற்காகவே இலங்கை, இந்திய அரசுகளுடன் நாம் பேசுகிறோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய அணுகுமுறை தேவை என நாம் வலியுறுத்துகிறோம். பழைய அணுகுமுறையால் - சண்டையால் எந்தப் பயனும் இல்லை என்

[8ஆம் பக்கம் பார்க்க]

## இலங்கை அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பாது

லண்டன் ஏப்ரல் 5

இலங்கையில் ஏற்பட்ட வன்செயல்களை அடுத்து இங்கிருந்து அகதிகளாக வெளியேறி சுவிஸில் தஞ்சம் கோரிய இலங்கை அகதிகள் எவரும் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்.

-இவ்வாறு சுவிஸ் அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் பொதுத் தேர்தல் முடிவடைந்து விட்டது.

ஆனால் அங்கு அரசியல் சூழ்நிலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

ஆகவே சுவிஸில் அரசியல் அடைக்கலம் நிராகரிக்கப்பட்டு விசா மறுக்கப்பட்டவர்கள் கூட தற்போதைக்கு சுவிஸில் இருந்து திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்.

-இவ்வாறு சுவிஸ் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## உள்ளூர் சேவையில் சொகுசு பஸ்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபட்டிருந்த புதிய இஸூசு சொகுசு பஸ்கள் நேற்று உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

வவுனியாவிற்கு அப்பாலான சகல போக்குவரத்துக்களையும் வட பிராந்திய போக்குவரத்து சபை நேற்றுடன் நிறுத்தியுள்ளது.

அதனை அடுத்து யாழ்-கொழும்பு சேவையில் ஈடுபட்ட பஸ்களே தற்போது உள்ளூர் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ஓ-10)

## ஷெல் தாக்குதலில் காயமுற்றார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

அலம்பில் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் அலம்பில் நாகலிங்கம் வீதியைச் சேர்ந்த சின்னத்தம்பி மருதலிங்கம் [வயது 83] என்பவராவர்.

இவர் தமது வீட்டிலிருந்தபோது இரவு 8 மணியளவில் ஷெல் வந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இவர் முதுகில் காயமடைந்தார். [அ-10-9]

### பிந்திய செய்தி

## சில பகுதிகள் இருளில்

யாழ்ப்பாணத்தின் சிலபகுதிகள் நேற்றிரவு 10.40மணியளவில் இருளில் மூழ்கின.

சுன்னாகம் மின் விநியோகம் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கொள்ளை

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின ஏழாலை மேற்கில் அமைந்துள்ள கிளைக் கடை கடந்த ஞாயிற்றுக்கிழமை கொள்ளையரின் கைவரிசைக்கு இலக்கானது.

ஆயுதங்கள் சகிதம் உள்ளே நுழைந்து கொள்ளையர் அங்கிருந்த காவலாளியை பயமுறுத்தி விட்டு கொள்ளையில் ஈடுபட்டனா எனத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-10]

# இந்தியத் துருப்புகள் வெளியேறும் என டிக்ஸிற் உறுதி கூறுகிறார்

### இலங்கையை விட்டுப் புறப்படு முன்னர் பேட்டி

கொழும்பு, ஏப்ரல் 5

நிரந்தரமாக இலங்கையில் நிலைகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தியத் துருப்புக்கள் இங்கு வரவில்லை. அமைதி உடன்பாட்டின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பணிகள் பூரணமாக நிறைவேறறப்பட்ட அடுத்த கணம் இந்தியத் துருப்புக்கள் வெளியேறிவிடும் என நான் உங்களுக்கு உறுதி தருகிறேன்.

கொழும்பில் இருந்து புறப்பட முன்னர் திரு. ஜே. என். டிக்ஸிற் 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் இப்படித் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இந்தியத் தூதராக இம் மாதம் நடுப்பகுதியில் திரு. டிக்ஸிற் பதவி ஏறக் இருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நிறையப் பிரார்த்தனையுடன் நான் பாகிஸ்தான் செல்கிறேன்.

இலங்கையில் பணியாற்றிய நான்கு ஆண்டுகளும் பல நிகழ்வுகளைக் கொண்டதாக அமைந்தன.

எனது மூன்று தசாப்த ராஜதந்திர பணியிலும் வெளிநாட்டுசசேவையிலும் இலங் பணிபோன்று எதுவுமே இருந்தது இல்லை.

இந்தியாவின் ஸ்திர நிலைப்பாட்டுக்கும் பிராந்தியத்தின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ. ஜ. முன்னணி - ஜனாதிபதி மீண்டும் திங்களன்று பேச்சு

கொழும்பு, ஏப்ரல் 5

திரு. வே. பாலகுமாரன் தலைமையில் சென்ற ஈழவர் ஜனநாயக முன்னணியின் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவை கொழும்பில் சந்தித்துப் பேசியது.

பேச்சுவார்த்தையின் போது வடக்கு, கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்றும்-

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்

[8ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் [illegible]ரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த அலுமாரி, கட்டில் ஓவ்விஸ் மேசை, சோக்கேஸ், T. V. D. பிறிச், சிங்கர்மெசின் Voltage Regulator, கண்ணாடி மேசைகள், மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 'Super'a 843, பருத்தித்துறைறோட், அரசடிச்சந்தி, நல்லூர். (10260)

National Video Deck Portable N.V 180, புதியதும், பாவித்ததும் விற்பனைக்கு உண்டு. மற்றும் National N.V-100, 1000 Watts வீடியோ லைற் சகலவிதமான Video Heads K.V. 2090 Sony T.V. சகலவிதமான வீடியோ கசற் வகைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. எவர்விஷன், 21A. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-2142]

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/2136)

### கார் விற்பனைக்கு

A-50 [EN 6000 தொடர் இலக்கம்] மிகவும் நல்ல நிலையிலுள்ளது. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Dr Rasiah, 'Janani Vasa' Suthumalai North Manipay. [C 2143]

### இறைச்சி க்கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (10251]

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/2135)

### ACCOUNTS CLERK

Part qualified with at least 2 years Experience or EX-Inland Revenue Officer living within city limits. N. Karunai Ananthan,& Co. C/o Taxman 55 1/2 Kannathiddy. Jaffna. (C1596)

### வியாபார இடவசதி

யாழ். பஸ்ராண்டை அண்மித்த பகுதியில் கடைகள் உண்டு. தொடர்பு கொள்ளவும்; 478, மே/பா உதயன், மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/2129)

### தவறிவிட்டது

561892040 V இலக்கம் கொண்ட அடையாளஅட்டை மட்டுவில் அம்மன் ஆலயத்தில் தவறிவிட்டது. சண்டெடுப்பவர்கள் தயவு செய்து அதனை உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10276)

### ஆனந்தா தேயிலை

வந்துவிட்டது B. O. P. Fannings தேயிலை முன்கூட்டியே பதிவு செய்தவர்களுக்கும் வழக்கமான எமது வாடிக்கையாளர்களுக்கும் முன்னுரிமைஉண்டு. ஆனந்தா ரீ ட்ரேடர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி. கந்தரோடை, சுன்னாகம். (81)

### தேவை

எமது தையல் நிறுவனத்திற்கு நல்ல தையல் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் உடனடியாகத் தேவை. சிறுவர் சிறுமியர்களுக்கு உடைகள் வெட்டக்கூடியவர்களும் தேவை. அத்துடன் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும். இல. 42, C/o உதயன்: (10274)

### மணமகன் தேவை

B Sc விஞ்ஞானப் பட்டதாரி, 28 வயதுள்ள ஆசிரியைக்கு இந்துவேளாள சைவ போசனமுடைய செவ்வாய் தோசமில்லாத மணமகனைப் பெற்றோர் விரும்புகின்றார்கள் சாதகக் குறிப்புடன்தொடர்பு கொள்ளவும். 479 C/o உதயன், யாழ்ப்பாணம். [76]

### WANTED

Jaffna Hindu Vellala Parents seeks a professionaly qualified Bride, below 27 with substantial dowry for their Engineer Son 29, years holding Responsible Post in govt Dept. Apply with full details and horoscope. 477, C/o, Uthayan. Jaffna. (59)

### கோழி·குஞ்சு விநியோகம் Uplands Farm

(Cobb) புரொயிலர் குஞ்சு [Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு (பிலிமத்) கறுப்பு புள்ளி சேவல்குஞ்சு 5ஆம்திகதி புதன்கிழமை சகாய விலைக்கு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில் (10244)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயின ஒரு நாள் லோமன் புரொயிலர்க்குஞ்சுகள் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் 12 4 - 1989 இல் விநியோகிக்கப்படும். 10 - 4 - 89 க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். (1) திருமகள் ஸ்ரோர்ஸ், சிவலிங்கப் புளியடி, (2) கிருஷ்ணா சென்ரர், திருநெல்வேலிச் சந்தி, (3) C S. K. பாம் சென்ரர், சச்சேரியடி. (4) தட்டாதெருச் சந்தி. [80]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்நு கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### OMEGA

சகல குளிர்சாதனப் பெட்டிகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். மோட்டருக்கும் ஒருவருட உத்தரவாதம் கொடுக்கிறோம். Gas நிரப்ப ரூபா 700/- மாத்திரம். ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (10457)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre, Prima Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், Hy line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (10252)

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

### வாடகைக்கு

இந்தியா, சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட அதி நவீன டிசைன்களின் மணமகளின் தலைச்சோடனை நகைகள், வாடகைக்கும் விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; கனகசபை தர்மகுலசிங்கம், கணேஸ்வாசா, வாரிவளவு, காரைநகர். C/o சித்தி நகைமாளிகை, 213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [10746]

### எவர் சில்வர் தயாரிப்புகள்

இல்லத்தரசிகளே! Gas அடுப்பிலோ, மின் அடுப்பிலோ சமைப்பதற்கேற்ற கண்ணைக் கவரும் பல்வகை தரமான எவர்சில்வர் பாத்திரங்களுக்கு தவறாமல் நாடுங்கள்: ''Rajz Brand'' எங்கும் விற்பனையாகின்றன. பலவிதமான அளவுகளிலும் டிசைன்களிலும் அடுக்குச் சட்டிகள், தாச்சிகள் Frying Panகள் இன்னும் பல காட்சி அறை S.A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C1898)

### மாணவர்களுக்கு சீருடை

பூநகரி முல்லைத்தீவுப் பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள், பாடசாலை உபகரணங்கள் என்பனவற்றை அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியுள்ளது,

பூநகரிப்பகுதி மாணவர்களுக்கு 25 ஆயிரத்து 600ரூபா பெறுமதியான சீருடைகள், உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவுப் பகுதி மாணவர்களுக்கு 1 லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான சீருடைகளும், உபகரணங்களும் வழங்கப்பட்டன. [இ-9]

## மாறிய படங்கள்

நேற்றைய உதயன் இரண்டாம் பக்கத்தில் வெளியான நினைவஞ்சலி விளம்பரத்தில் ச. அருளம்பலம் (துரை), ச. நமசிவாயம் [சாமி] ஆகியோரின் படங்கள் ஒன்றுக்கொன்று மாறிப் பிரசுரமாகியமை தவறு என்பதை அறியத்தருகின்றோம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:- 25 - 06 - 1900

மறைவு:- 17 - 03 - 1988

திதி:- 05-04-1989

**அமரர் வைத்தியநாதர் கனகராசா**
(மலாயன் பென்ஷனர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள
மனைவி மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''யோகமாளிகை''
சங்கானை. (82)

## தேவை

கோண்டாவில் சந்தியில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் கூல்பாரில் வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை, இருபாலாரும் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

பி. ப. 2 மணி — 4 மணி வரை

**ஷர்மிளா பார்மஸி**
கோண்டாவில் கிழக்கு,
பலாலி ரோட் சந்தி. [10280]

## கேள்விப்பத்திர விற்பனை

''மின்மோட்டார்கள், (5 குவ) தொழிற்சாலையில் உபயோகித்த இரும்பு, கல்வனேஸ், தகர தொட்டிகள் உபகரணங்கள், இயந்திரங்கள் என்பன கேள்விப்பத்திரம் கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் 10 4-89 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கும், பொருட்களை நேரில் பார்வையிடுவதற்கும் காரியாலயத்தில் சமுகமளிக்கவும்''.

பொதுமுகாமையாளர்
மாணிப்பாய் பரிஷ்
தெங்கு பனம் பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்,
மானிப்பாய். (சி/2010)

மாங்குளத்தில் தன்னுயிர் நீத்த
மண்கும்பான் ஊரில் வாழ்ந்த

**திரு. மதியாபரணம் ஜெயாராஜா**
அவர்களின்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

படைப்பு: 29 | 11 | 1957



அழிப்பு: 08 | 04 | 1986

திதி: 05-04-1989

எண்ணிய இருபத்தொரு ஒன்பது சேர் அகவை தன்னில்
பன்னரிய சேவைதனை ஈந்திட்ட வேளை தன்னில்
குணத்திலே குன்றானன் ஜெயாராஜா அண்ணலவன்
கணத்திலே எமையெல்லாம் கதறவிட்டே
சென்று விட்டான்
உனது அன்னை வாடுகிறாள் உன் பிரிவு தாழாது
கணமேனும் உனை மறவாது
எமதுள்ளம் வேகின்றதே மூன்றாண்டு மறைந்தாலும்
எம் மனது தணலாய் எரிகிறது.

உன் பிரிவால் வாடும்;
தாய், சகோதரர்கள்,
அத்தான்மார், அண்ணிமார்,
மைத்துனர்மார், மருமக்கள்,
உறவினர்கள்.

மண்கும்பான். (10279)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னையா ஜெயந்தி (ராசாத்தி)**

மலர்வு: 31- 03- 1966

உதிர்வு: 08- 04- 1986

காலன் உனைக் கவர்ந்து மூன்றாண்டு ஓடிவிட்ட போதிலும் உன் எண்ணம் மறந்திடுமோ எங்களுக்கு? விண்ணகத்தில் இணைந்துவிட்ட உன்னை எண்ணியே வாழ்ந்திடும்

அன்புப் பெற்றோர்,
அருமைச் சகோதர சகோதரிகள்,
மற்றும் [illegible] உறவினர், நண்பர்கள்.

[illegible]
மானிப்பாய். (10278]

## ரமழானை நிர்ணயிக்க மாநாடு

கொழும்பு, ஏப். 5 ரமழான் நோன்பு ஆரம்பிக்கும் தினத்தை நிர்ணயிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

முதல் பிறை தெரிவதைப் பொறுத்து திகதி நிர்ணயிக்கப்படும்.

மாநாட்டில் கதீப்மார் சகல பள்ளிவாசல்களினதும் நம்பிக்கையாளர்கள், உலமாக்கள், ஹிலால் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-எ)

## VACANCIES

We require immediately

1. **AUDIT CLERK**
   Apply Stating experience and Salary Expected.
2. **AUDIT TRAINEE**
   Candidates Should have good Knowledge of English and have passed G.C.E. (O/L)

**Ratnam & Co**
Chartered Management Accountants
Registered Auditors,
66, Main Street, Jaffna. [84]

வெளிவந்துவிட்டன — விற்பனையாகின்றன

## S. L. A. S

போட்டிப்பரீட்சைக்குரிய வழிகாட்டி

**பொது அறிவு - நுண்ணறிவு கிரகித்தல்**

* அஸ்ரன் வெளியீடு - விலை ரூபா 70. 00

பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலைகளில பெற்றுக்கொள்ளலாம்.

● மொத்தமாகப் பெறவிரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டடம் 1ஆம் மாடி) [C-2139]

## PERSONAL CLASS

* PHYSICS - * MECHANICS
SPECIAL — HOLIDAYS ONLY
By
Mr MANIAM BSc (1st CLASS)
COMMENCING ON 06 04- 1989
at 11. 00 a. m

Tues 10. 30 — 12 30 (Dynamics)
Thurs 10. 30 — 12. 30 (Hydrostatics)

3rd CROSS STREET.
JAFFNA. [C/2144]

## 52ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:- 03- 12- 1971

மறைவு:- 15- 02 1989

**குமாரசாமி தவயோகராஜா**
(கண்ணன்)

அகால மரணமடைந்த திரு. கு. தவயோகராஜாவினுடைய மரணச்சடங்கில் நேரடியாக சமுகம் அளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், மற்றும் பல்வேறு உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எதிர் வரும் 07- 04- 89 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாசமுள்ள:
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பி.
உற்றார், உறவினர்கள்.

வேதரடைப்பு,
காரைநகர். (85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜே. வி. பியின் ஹர்த்தாலை முறியடிக்க

# தென்பகுதி வர்த்தகர்களுக்கு துப்பாக்கிகள் வழங்க ஏற்பாடு

கொழும்பு, ஏப்ரல் 5

ஜே. வி. பியின் ஹர்த்தாலை முறியடிக்க தென்பகுதி வர்த்தகர்களுக்கும் தனியார் பஸ் ஊழியர்களுக்கும் துப்பாக்கிகள் தருவதாக இலங்கை இராணுவம் உறுதி வழங்கியுள்ளது.

கடையடைப்பு, வேலை நிறுத்தம் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தென்பகுதி மக்களை ஜே. வி. பி. கேட்டுள்ளது தெரிந்ததே.

இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாவது:

தீவிரவாதிகள் கடைகளுக்குச் சென்று பூட்டும்படி வற்புறுத்திவருகிறார்கள். அப்படி வந்து நெருக்குதல் தரும் தீவிரவாதிகளை அசிட் குண்டுகள் கொண்டு தாக்கும்படி தென்பகுதி வர்த்தகர்களுக்கு நாம் ஆலோசனை கூறியுள்ளோம்.

இந்த அசிட்குண்டுகளை எப்படித் தயாரிப்பது என்பது பற்றிய நுணுக்கங்களை வர்த்தகர்களுக்குத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றோம்.

பஸ்சேவை நடைபெறுவதைத் தடுப்பவர்களைத் தாக்க குறைந்தது கத்தியாவது வைத்து இருக்கும்படி பஸ் ஊழியருக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

தென்பகுதியில் நடந்த வர்த்தகர் - பஸ் ஊழியர் மாநாட்டில் இந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

தென்பகுதி பிரிகேடியர் சி. எல். அல்கம மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். (ஒ-எ)

# பெற்றோரின் ஒத்துழைப்பிலேயே எதிர்காலம் தங்கி இருக்கிறது

## சென் பீற்றர்ஸ் விளையாட்டுப் போட்டியில் உரை

யாழ்ப்பாணம் ஏப்ரல். 5

இந்தப் பாலர் பாடசாலையின் வளர்ச்சியில் ஆசிரியர்களுடன்பெற்றோர் ஒத்துழைக்கிறார்கள். இதன் எதிர்காலம் ஒத்துழைப்பிலேயே தங்கி இருக்கிறது.

யாழ். சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டியில் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் அதன் அதிபர் திருமதி ஆர். சதானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பல வருடங்களாகப் பயன்படுத்தப்படாதிருந்த றிம்மர் மண்டப மைதானத்தில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

டாக்டர் விஜயரத்தினம் டாக்டர் திருமதி விஜயரத்தினம் ஆகியோர் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

டாக்டர் விஜயரத்தினம் உரையாற்றுகையில் பிள்ளைகளுக்கு சிறுவயதிலே இப்படியான பயிற்சி அவசியம் என்று கூறினார்.

மிக்கி மவுஸ், டொனல்ட் டக், ரெறிபெயர் ஆகிய இல்லங்கள் போட்டியில் கலந்து கொண்டன.

பாடசாலை மாணவர் தலைவி கிஷானி மகேந்திரன் வரவேற்பு உரை நிகழ்த்தினார்.

சென். பீற்றர்ஸ் தேவாலய முகாமைக்குரு அருட்திரு. கே. பி கோவிந்தராஜ் பிரார்த்தனையுடன் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். [இ]

# மக்கள்தொண்டர்படையினர் 1,800 பேருக்குப் பயிற்சி

கொழும்பு, ஏப்ரல் 5

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொண்டர் படையில் முதல் தொகுதியாகச் சேர்க்கப்பட்ட ஆயிரத்து எண்ணூறு பேருக்கு இப்போது போர்க் கால பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இது முடிந்த பின்னர் பொலீஸ் பயிற்சி அளிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று மக்கள் தொண்டர் படை கமாண்டன்ற் ஆன சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு. ரி. ஆனந்தராஜா தெரிவித்தார்.

போர்க் காலப் பயிற்சியை இந்திய அமைதிப்படை திருமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் வைத்து வழங்குகிறது. எதிர்காலத்தில் திரட்டப்படும் மக்கள் தொண்டர் படையினருக்கு இரண்டு பயிற்சிகளும் ஒரே சமயத்தில் வழங்கப்படும் என்று பொலீஸ் அதிபர் திரு. ஆனந்தராஜா சொன்னார். (ஒ-எ)

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

அம்பாறை, ஏப்ரல். 5

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு ஊடாக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை கிரமமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில், அம்பாறை மாவட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, பொதுமக்களுடனான நேரடிச் சந்திப்புக்களையும், கலந்துரையாடல்களையும் நடத்தி வருவதாக முன்னணியின் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளரும் கிழக்குப் பிராந்திய மத்திய குழுஉறுப்பினருமான கமலன் தெரிவித்தார். (க- 144)

## வட்டுக்கோட்டை

# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பரந்தனில் கிளைக்கல்லூரி

யாழ்ப்பாணம் ஏப். 5

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினர் பரந்தனில் ஒரு கிளைப் பாடசாலையை ஆரம்பிக்கவுள்ளனர். இதற்காகப் பரந்தன் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் நிலம் வாங்கப்பட்டு கட்டட வேலைகள் தொடங்கியுள்ளன.

இக்கிளைப் பாடசாலையில் ஆரம்பத்தில் 5ஆம் வருடம் வரையிலான பாடசாலையும் விசேட தொழிற்பயிற்சி வகுப்புகளும் நடைபெறும். ஊர் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப பாடவிதானங்கள் மாற்றியமைக்கப்படும்.

இப்பாடசாலையின் கட்டட வேலைகளை யாழ்ப்பாணக் கல்லூரியின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியலாளர்கள் கவனித்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் முதலாவது அதிபரான கலாநிதி டானியல் பூவரின் 200ஆவது பிறந்த தினமாகிய இவ்வாண்டு ஜூன் 27ஆம் திகதி கட்டடங்கள் திறக்கப்படும் என யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலை, கிளைப் பாடசாலை ஒன்றை நடத்துவது இதுவே முதல்தடவை என்பதும் கல்கிசை சென். தோமஸ் கல்லூரி இத்தகைய கிளைப்பாடசாலைகளை பண்டாரவளை, குருத்தலாவை ஆகிய இடங்களில் அமைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கவை. (க)


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

# S. P. ANTON

## விடுக்கும் ஓர் உருக்கமான வேண்டுகோள்

**அன்புள்ள தமிழ்ச் சகோதரர்களே!**

உங்களில் பலரின் கனடாப் பயணத்துக்கு, எனது உயிரையும் துச்சமென மதித்து, ஏற்பாடுகளைச் செய்தேன். இதனை உங்களில் பலரும் அனுபவ ரீதியாக அறிவீர்கள். எனினும், நாம் ஒன்று நினைக்க, தெய்வம் வேறு நினைத்தது போல, எனது முயற்சி கைகூட முடியாமற்போனது. அதற்குப் பல புறக்காரணிகள் உள்ளன.

எது எப்படியாகிவிட்ட போதிலும், என்னை நம்பிப் பணம் கட்டிய எவருக்கும் நஷ்டம் வரவோ, தோல்வி வரவோ நான் விடமாட்டேன்.

இந்த முயற்சியில் நான் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இறைவன் சோதனையால் அது முடியாமற் போகுமானால், என்னிடம் கனடாப் பயணத்துக்குப் பணம் செலுத்திய அனைவரினதும் கட்டுப்பணத்தையும் நியாயபூர்வமான முறையில் திருப்பித் தருவேன் என்றும், அல்லது அவர்கள் விரும்பினால் வேறு நாடுகளுக்கு அனுப்பி வைப்பேன் என்றும் உறுதி கூறுகின்றேன். மோசடிப் பாதையில் பணம் தேட வேண்டிய நோக்கமோ அவசியமோ எனக்கில்லை.

யாழ் நகரிலும், கொழும்பிலும் உள்ள எனது அலுவலகங்களில் பணியாற்றும் எனது விசுவாசம்மிக்க ஊழியர்களையும், எனது குடும்பத்தினரையும் மிரட்டுவதனாலோ, வதைப்பதனாலோ எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை.

எனது முதல் முயற்சியில் தோல்வி அடைவதற்கு உங்களில் பலருக்கும் பங்குண்டு என்பது இப்போது வெளிச்சமானதாகும்.

எனவே, இந்தப் பயண முயற்சியை மீண்டும் வெற்றிகரமான விதத்தில் ஒருங்கமைத்து, அனைவரையும் திருப்பி அழைத்து அனுப்புவதற்கோ அல்லது முதலிடப்பட்ட தொகையை திருப்பித் தருவதற்கோ எனக்குக் கால அவகாசம் தந்து என் முயற்சியில் ஒத்துழைக்குமாறு பணிவன்புடன் வேண்டி, இதனைச் சிங்கப்பூரிலிருந்து வரைகின்றேன்.

**உங்கள் பயண அமைப்பாளர்:**

**எஸ். பி. அன்ரன்**

(10267)



உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான விபவ வருடம் பங்குனித் திங்கள் 25 ஆம் நாள் (07-04-1989) வெள்ளிக்கிழமை முற்பகல் 8.00 மணிமுதல் 10.00 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| --- | --- |
| **சிறீதரன் (குட்டி)** | **ஈஸ்வரி (நங்கி)** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**08. 04. 1989 மணமகன் இல்லத்தில் பிற்பகல் 4 மணிக்கு வரவேற்பு உபசாரம் நடைபெறும்.**

தங்கள் நல்வரவை நாடும்:

**டாக்டர் வை. ஏகாம்பரம்,**
**திருமதி யோ. ஏகாம்பரம்,**
76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**திரு. திருமதி ப. குமாரசிங்கம்,**
'மங்கையர் மகால்'
கோட்டைபுரம் வளவு,
இருபாலை கிழக்கு, கோப்பாய்.

(78)



உ
ஓம்
விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண 'அழைப்பிதழ்

**அன்புடையீர்!**

நிகழும் விபவ ஞு பங்குனி மீ 24 ஆம் திகதி (06 - 04 - 89) வியாழக்கிழமை பகல் 12 மணி 56 நிமிஷம் முதல் 1 மணி 32 நிமிஷம் வரை வரும் சுபமுகூர்த்தவேளையில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| --- | --- |
| ★ **தனபாலன்** ★ (இயந்திர இயக்குனர் - கனடா) | ★ **குமுதினி** ★ |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு சொர்ணவடலி பிள்ளையார் கோயிலில் திருமண விழா இனிது நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் (6-4-89) அன்று பிற்பகல் 5.00 மணி முதல் 7.00 மணி வரை நடைபெறும்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

**திரு. அ. பொன்னுத்துரை**
தம்பதிகள்
21, கன்னார்லேன்,
நல்லூர்.

**திரு. க. மகாதேவா**
தம்பதிகள்
பூநாறிமரம் லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(10272)



An associate of The Maharaja Organisation Limited
1939-1989 50 YEARS
The courage to be different.

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
**S-Lon எஸ் லோன் என்று கேட்டு**
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe



உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

**S-Lon Lanka (Pvt) Ltd.**
497, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596208 — 93716 - 8


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புத்தாண்டுக்கு முன்னர் உணவு உடைப் பொதிகள்
### செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஏப் 5 வட பகுதி செஞ்சிலுவைச் சங்கம் வவுனியா, முல்லைத் தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அண்மைக்கால அசம்பாவிதங்களின்போது குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு உணவு மற்றும் துணிப்பொதிகளை வழங்க உள்ளது.

எதிர்வரும் புத்தாண்டு தினத்திற்கு முன்னர் இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுள்ளது.

இந்தத் தகவலை சங்கத்தின் தலைவர் டாக்டர். தெய்வேந்திரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த நான்கு மாவட்டங்களிலும் இதுவரை 3 ஆயிரத்து ஐநூறு குடும்பங்கள் தங்கள் தலைவர்களை இழந்துள்ளன என மதிப்பிடப் பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் இப்பொதிகள் விநியோகிக்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

### அரசு உத்தரவு

ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களில் வசிப்பவர்களுக்கு எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் 10 ஆயிரம் தொன் அரிசி ய நிவாரணமாக வழங்க வேண்டும் என்று சமூக சேவைத் திணைக்களத்துக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. [ஒ-எ]

## கொக்குவில் பொற்பதி வீதி வீடுகளைப் புனரமைக்க நிதி

யாழ்ப்பாணம் ஏப். 5 சமீபத்திய அசம்பாவிதங்களின்போது கொக்குவில் பொற்பதி வீதியில் எரிக்கப்பட்ட 26 வீடுகளையும் புனரமைக்க அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நிதிஉதவிகளை வழங்கியுள்ளது.

வீடுகளை மீள அமைப்பதற்கு 1லட்சத்து 75 ஆயிரம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டு இதுவரையில் 1லட்சத்து 43ஆயிரம் ரூபா வரையான நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மிகுதிதொகை மீளளிப்புப் பணிகள் மேற்பார்வை செய்யப்பட்டபின் வழங்கப்படும்.

மேலும் அராலி வீதியில் புதிய குடியிருப்புத் திட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க 54 ஆயிரத்து 420 ரூபா நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் வலிகாமம் வடக்கு மீனவர்களுக்கு அவர்களது மீன்பிடி வலைகளுக்கென 3 லட்சத்து 90ஆயிரம் ரூபா அப்பகுதி பிரஜைகள் குழுவினர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. [இ-9)


# "டினெஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!



குறுகிய சில வருடங்களில், உள்ளூர்ச் சந்தையில், சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் உன்னத அபிமானத்தைப் பெற்று விட்டன. காரணம்? தரத்தில் சிங்கரின் பரம்பரைச் சிறப்புத் தான்! காலம் காலமாக, சிங்கர் பேணியும் வளர்த்தும் வரும் தரச் சிறப்பு. தொழில் நுட்பத்திலும் உறுப்புகளின் நேர்த்தியிலும் விற்பனைக்குப் - பின் - சேவை ஒழுங்கிலும் நாடு முழுவதும் பரந்து புகழ் பெற்ற சிங்கரின் தரச் சிறப்பு. இலங்கையில், விற்பனைச் சந்தையில் பெரும் பங்கு நிலையைப் பெற்று விட்ட சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆயிரமாயிரம் சொந்தக்காரர்களுடைய நம்பிக்கையை வெற்றி கொண்டதும் அவற்றின் தரச் சிறப்புத் தான். தராதரச் சிறப்புப் போலவே, சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனைச் சந்தைப் பங்கு நிலையும் வேகமாய் வளருகிறது.

கிடைக்கும் ரகங்கள் –
12" மற்றும் 14" கறுப்பு/வெள்ளை; 14" வர்ணம் (ஸ்டீரியோ) மற்றும் (மொனிட்டர்); 16" வர்ணம்; 20" வர்ணம,
விலை, குறைந்தது ரூ. 3,990/- முதல்.

# சிங்கர் தொலைக்காட்சி

உந்து சக்தி பற்பல உடையது; முந்து சக்தி எதுவுமே கிடையாது.

சிங்கர்*
மாசற்ற மேன்மை

ZENITH


மக்கள் மகம்

### புற்கை தின்னிப் பிள்ளையார் ஆலய நிர்வாகிகள்

மானிப்பாய் ஏப்ரல் 5 மானிப்பாய் நாரவரக்காடு புற்கை தின்னிப் பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. எஸ். டிவகலாலா, தலைவர்: திரு. சி. பத்மநாதன், உப தலைவர்: திரு. கே. அருளம்பலம், செயலாளர்: திரு. என். விக்னேஸ்வரன், உப செயலாளர்; திரு.எஸ்.ஜெயானந்தகுமார், பொருளாளர்: திரு. எஸ். திருவிளங்கம், உப பொருளாளர்: திரு. கே.ரி. நாயகம், நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள்: வி.குமாரசாமி, எஸ். துவாரகன், எஸ். கனகசபாபதி, திரு. சிவபாதசுந்தரம், திருமதி எம். சுந்தரலிங்கம்பிள்ளை.

கணக்குப் பரிசோதகர்; திரு. கே. சோமசுந்தரம்.

### தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கம்

கொடிகாமம், ஏப்ரல் 5 தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ சங்க நெறியாளராக பின்வருவோர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

அ. திருநாவுக்கரசு க.வாரித்தம்பி, க. தம்பையா, முன்னைய உறுப்பினர், க. சி.யோகராசா, பூ. சிவராசா, வே. சின்னையா, சி.கணபதிப்பிள்ளை, திரு. திருநாவுக்கரசு தலைவராகவும் திரு. க. வாரித்தம்பி உபதலைவராகவும் ஏகமனதாக மீண்டும் தெரிவுசெய்ய ப்பட்டனர்.

### திருச்சபை நிர்வாகிகள்

ஏழாலை தெற்கு தென்னிந்திய திருச்சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் வண. எம். தேவதாசன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருடஉத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் திரு. ஆர். ஜே. நவரத்தினம் திரு. மு. அருமைராசா, செயலாளர் திரு ஜி டி. ஜெயரட்னம், பொருளாளர் திரு. ஏ.ஜே. நவரத்தினம் சபாசங்கப்பிரதிநிதி திரு. எஸ். நவரட்ணராஜா, மாதர்சங்கத்தலைவி திருமதி பி. யேசுரட்ணம் ஓய்வு நாட்பாடசாலை அதிபர் திருமதி ஆர். ஜெயரட்ணம்.

பதினைந்துபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (க- 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு விட்டு நாடு செல்லும் நம்மவர் நிலைமை:

## அந்நிய சூழலில் ஏற்படும் உளத் தாக்கங்கள்

காலம் வளர்ந்து கொண்டே செல்கிறது. எம்மவர்க்கு அந்நிய நாட்டுப் பயணங்களெல்லாம் அயல் வீட்டுப்பயணங்கள் போலாகி விட்டன. இன்னும் சில காலத்தில் தமிழன் இல்லாத நாடே இல்லை என்ற நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்நிய நாட்டுக்குச் செல்பவர்கள் அந்தக் கலாசாரத்துடன், அந்த மக்களுடன் அந்தப் புதிய சூழலுடன் வாழ எப்படி இசைவாக்கமடைந்து கொள்கிறார்கள்? இவர்களுக்கு எப்படிப்பட்ட உளத்தாக்கங்கள் ஏற்படுகின்றன?

சாதாரணமாக ஒவ்வொரு மனிதனும் தனது சமுதாயத்தில் ஒரு தனித்துவமான இடத்தை வகிக்கிறான். தனது ஆளுமைகளை வெளிப்படுத்த, தனது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய விதத்தில் எடுத்துக்கூற அவன் இசைவாக்கமடைந்துள்ளான். அத்துடன் கலாசார ஒருமைப்பாடு அவனைத் தனிப்படுத்தாது ஒரு சமுதாய வாழியாக இனம் கண்டுகொள்கிறது.

இவைதவிர, ஒருவன் கழகப் பொருளாதார அமைப்பில் ஒரு குறித்த வர்க்கத்துடன் இனங் காணப்பட்டிருப்பான். இங்கே அவனுக்கென்று வர்க்கக் குணும்சங்கள் இருக்கும். அவனை அண்டி வாழ்பவர்கள் இருப்பார்கள். இங்கே அவனுடைய கல்விக்கேற்ப அல்லது திறமைக்கேற்ப ஒரு பதவி இருக்கும். அப்பதவியின் வாயிலாகப்பெற்ற பெருமையும் செல்வாக்குமிருக்கும்.

### பாரிய தாக்கங்கள்

இது இப்படி இருக்கையில், முற்றிலும் ஒரு புதிய கலாசாரத்துள் நுழைவது நிச்சயமாக பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவல்லது. இத்தாக்கங்கள் பிரதானமாக உளவியல் தாக்கங்களே. இத்தாக்கங்களை பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஓபேக் (Oberg) என்ற மானிடவியலாளர் சில அடிப்படையான தாக்கங்களை ஒன்றிணைத்து அவற்றைக்கலாசாரத் தாக்கம் என அழைத்தார்.

பொதுவாக மேலைத்தேயக் கலாசாரத்திற்கும் எமது கலாசாரத்திற்கும் பாரிய வேறுபாடுகள் உண்டு. அத்துடன் விஞ்ஞான வளர்ச்சி மேலைத் தேயங்களில்... இந்த மின்னணுவியல் யுகத்தில் சொல்லவுந் தேவையில்லை. நாளுக்கு நாள் மாறும் நாகரிகம், இயந்திரமயமான வாழ்க்கைமுறை, தேவைக்கு மேற்பட்ட தெரிவுகள் இப்படியே பலவற்றைச் சொல்லலாம்.

எமது நாட்டிலும் முன்னேற்றம் உண்டு. இந்த முன்னேற்ற வேகத்துடன் நாம் எம்மை முன்னேற்றிக் கொள்ள இசைவாக்கமடைந்துள்ளோம். எங்கள் சமுதாயத்தில் தெரிவுகள் குறைவு எங்களுக்கென்று நாங்களாகவே படிப்படியாக நிதானமாகத் தெரிந்து கொள்வதற்கு எங்கள் சமுதாயம் எங்களை எப்படி எதிர்பார்க்கிறதோ, எங்கள் வாழ்வைப் பற்றி நாங்கள் என்ன நினைக்கின்றோமோ... இவற்றினடிப்படையில் எங்கள் வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொள்வது எங்களுக்கொன்றும் பெரிய விடயமல்ல.

ஆனால் அந்நிய கலாசாரத்தில்... இவையெல்லாம் தலைகீழாக மாறுகிறது. அந்தச் சமுதாயத்திற்கு இசைவாக்கமடைய நாம் பாரிய உளத் தாக்கங்களுக் கூடாகச்செல்ல வேண்டும்.

### பல இழப்புகள்

அடுத்ததாக அந்நிய நாட்டுக்குச் செல்பவர்கள் பலவற்றை இழக்கிறார்கள். தமது நண்பர்கள், தமது உறவினர், தமது சுற்றம் இவர்கள்தான் சமூகத்துணைகள். இவற்றையெல்லாம் இழக்கிறார்கள். அது மட்டுமல்ல தொழில் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற சமூக அந்தஸ்து, செல்வாக்கு, உடைமைகள்.. காலம் காலமாகச் சேமித்து வைத்து கடைசியில் இவற்றையெல்லாம் இழக்கிறார்கள். இந்த இழப்புகள் மொத்தத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒருவன் ஒரு புதிய சமூதாயத்தினுள் செல்லும் போது அங்கே அவன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த ஏற்றுக் கொள்ளலை முக்கியமாக இரண்டு காரணிகள் நிர்ணயிக்கின்றன.

ஒன்று, அந் நாட்டுக்கு நாம் செல்வதன் நோக்கம் ஐயமில்லை எம்மவர் அகதி அந்தஸ்து கோரி அதுவும் சட்டங்களை மீறி (அநேக சந்தர்ப்பங்களில்) சென்றுள்ளார்கள். மற்றையது, அவர்கள் (பிற நாட்டவர்கள்) எமது நாடு

**கொ. றெ. கொன்ஸ்ரன்ரைன்**

எமது மக்கள் பற்றி வைத்துள்ள அபிப்பிராயம் ஆரம்பக் காலங்களில் நல்ல அபிப்பிராயம் இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது எம்மவர்கள் அங்குஏற்படுத்தும் அசௌகரியங்கள் அந்தக் கருத்தை மாற்றியிருக்கும் இந்தச் சூழ்நிலையில் எம்மவர் வெறுப்பின் மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். பொருளாதார ரீதியான நன்மைகள் இருந்தாலும் இப்படிப்பட்ட சூழல் நிச்சயமாக ஒரு உளத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒரு புதிய சமுதாயத்தினுள் நாம் செல்கையில் எமக்கென ஒரு பாத்திரம் அங்கே இருக்காது. நாம் இதைச் செய்ய வேண்டும் சமுதாயம் இவற்றையெல்லாம் எதிர்பார்க்கிறது என்று தெரியாத நிலையில் ஒரு நிச்சயமற்ற குழப்ப நிலையே ஏற்படும். கூடவே அநேக வேலைகளில் நிரந்தரதொழில் கிடையாது. இவையும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

இப்படிப்பட்ட பாரிய வேறுபாடுடைய சூழலில் இந்த வேறுபாடுகளை நாம் உணர்வதால் அதிர்ச்சியும், கலக்கமும் ஏற்படுகிறது. இத் தாக்கங்களின் விளைவாக புதிய சூழலோடு தாக்குப் பிடிக்க முடியாமையால் கையறு நிலை ஏற்படுகிறது. இத் தாக்கங்களே கலாசாரத் தாக்கம் எனப்படுகிறது.

### கலாசாரத் தாக்கத்தின் காரணிகள்

கலாசாரத் தாக்கம் பல காரணிகளால் அதிகரிக்கப்படலாம். உறவினர்களின் இறப்பு, பெற்றோரின் இறப்பு, சொந்த ஊரில் அழிவு இப்படிப்பட்ட நிகழ்வுகள் தாக்கத்தின் பரிமாணத்தை அதிகரிக்கும். தமிழர்களின் சூழ்நிலையைப் பொறுத்தளவில் இன்னமும் எவ்வளவோ காரணிகள் அதிகரிக்கலாம். உதாரணமாகத் தொழில் இல்லாமை, தங்கு வசதி இல்லாமை, சிலருக்குத் தொழில், கல்வி வசதி கிடைப்பது, சிலருக்கு அகதி அந்தஸ்து கிடைப்பது போன்றவைகளும் பாதிப்பை அதிகரிக்கும்.

இத்தாக்கங்கள் ஒருவர் பிற கலாசாரத்திற்கு இசைவாக்கம் அடையும்முன் நிகழ்வன. தொடர்ந்து பிறகலாசாரத்தில் இருக்கும்பொழுது ஒருவர் வெற்றியீட்டிய ஒரு சமுதாய வாழியாக அல்லாவிடினும் ஓரளவிற்குத் தப்பிப் பிழைத்து உளத்தாக்கங்களை மட்டுப்படுத்தி வாழ வழிமுறைகளைத் தெரிந்து கொள்வார். இதன் விளைவாக ஈற்றில் நான்கு விதமாக மனப்பாங்குகள் உருவாகின்றன.

உயர்ந்த கலாசாரமாக ஒருவர் கருதிக் கொண்டிருக்கும் ஒரு பிற கலாசாரத்திற்குள் செல்வதனால் தனது சொந்த கலாசாரப் பாரம்பரியங்களைக் கைவிட்டு அந்தப் புதிய கலாசார முறைகளைக் கடைப்பிடிக்கலாம் இது எம்மவர் அநேகரில் ஏற்படக்கூடிய விளைவாகும். உதாரணமாக மேலைத்தேயங்களில் சில காலம் வசித்தவர்கள் அல்லது அடிக்கடி அங்கு செல்பவர்கள் இத்தகைய ஒரு மாற்றத்தைக் காட்டுவதை நாம் நாளாந்தம் காண்கின்றோம்.

சிலரில் இதற்கு நேரெதிரான ஒருவிளைவு ஏற்படலாம். அந்நிய கலாசாரத்தின் அந்நியத்தனத்தின் உந்தலால் தீவிர தேசியவாதிகளாக மாறலாம். இதற்கு உதாரணமாக இந்திய - இலங்கை சுதந்திரப் போராட்ட காலத்தில் தோன்றிய சில தலைவர்களைக் குறிப்பிடலாம். ஆயினும் இப்படியான மாற்றம் மிகக்குறைவு.

இன்னுமொருஇரண்டுசாரார் கலாசாரங்களுக்குமிடையில் ஊசலாடலாம். தன்னை ஒரு குறித்த கலாசாரத்துடனே, கலாசாரக் கலவையுடனே இனங் காண ஒரு நளம்பல் நிலைக்குத் தள்ளப்படலாம். இவர் தனது சொந்தக் கலாசாரத்திலும் குறைகளைப் பற்றித்தான் கதைப்பார். அந்நிய கலாசாரத்திலும் உள்ள குறைகளைப் பற்றித்தான் கதைப்பார்கள்.

மேற்சொன்ன மூன்று நிலைகளையும் கடந்து, ஒரு சிலரே இரு கலாசாரங்களையும் ஒன்றிணைத்த ஒரு இரட்டைக் கலாசார வாழ்முறையைக் காட்டுகின்றார்கள். இரண்டிலும் இருக்கும் தங்களுக்குத் தோதானவற்றைக் கடைப்பிடிக்கின்றார்கள். இந்தக் குழுவினுள் வருபவர்கள் எந்தக் கலாசாரத்திலும் மிகக் குறைந்த அளவிலேயே பாதிக்கப்படுவார்கள்.

இப்படியான பொதுமைப்பாடான விளைவுகள் எம்மவரில் எத்தனை விதத்தினருக்கு ஏற்படும் என்பது ஒரு கேள்வியே. எம்மவர்கள் அநேகமாக, அகதிகளாகவே செல்கின்றார்கள். குறித்த ஒருநோக்கம் அங்கே இருப்பதில்லை. பொருளாதாரக் காரணங்களுக்காகச் செல்கின்றார்கள் எனக் கூறினாலும் எப்படி இந்தப் பொருளாதாரச் சுபீட்சத்தை எய்தப் போகின்றார்கள் என்பது அநேக சந்தர்ப்பங்களில் முன்னரே தீர்மானிக்கப்படுவதில்லை. அத்துடன் அநேகர் இளைஞர்கள். ஏற்கனவே உளவியல் நெருக்கடிகளில் இருப்பவர்கள். ஆகவே கலாசாரத் தாக்கம் இவர்களைச் சில சமுதாயத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களில்கூட ஈடுபடத் தூண்டலாம். உதாரணமாக போதைப்பொருள் பாவனை, நாடோடி வாழ்க்கை முறை போன்றவற்றிற்கு இட்டுச் செல்லலாம். ஆயினும் விளைவுகளைப் பற்றி அறுதியிட்டு ஒருவரும் கூறிவிட முடியாது.

## சொந்த மண்ணை மறந்து வெளிநாடு போக வேண்டுமா?

மாாச் பதினைந்தாம் திகதி உதயனில் வெளிவந்த தங்கள் ஆசிரியர் தலையங்கம் தடம் புரண்டு தளம்பிக் கொண்டிருக்கும் பொது மக்களுக்கு வழிகாட்டக் கூடிய படிப்பினையான ஒரு நல்ல தலையங்கம்.

கால அரங்கில் நவீன மாயைகள் என்ற பொய்மைக்குள் சிக்கிச் சீரழிந்து போக இருக்கும் தமது மனங்களை ஒருநிலைப்படுத்தி வாழ்ந்து சிறக்க வேண்டிய அவசியத்தை பொதுமக்கள், குறிப்பாக இளைஞர்கள் புரிந்து நடக்க வேண்டும்.

சொந்த மண்ணை மறந்துவிட்டு வெளிநாடு போய்க் காலூன்றி விடவேண்டும் என்று துடிக்கிறவர்களுக்கு இது ஒரு வேதபாடமாகவே அமையும்.

சுன்னுகம். ஆனந்தி.

## சுகபோக வாழ்க்கைக்காக வெளிநாடு செல்லவில்லை

எங்கள் இளைஞர்கள் வெளிநாட்டில் இருந்து உழைத்து அன்னியச் செலாவணியை அனுப்புகின்றபடியால் தான் எமது நாடு எவ்வளவு அழிக்கப்பட்டும், எமக்கு எண்ணற்ற இழப்புகள் ஏற்பட்டும் நாம் தலைநிமிர்ந்து நிற்கின்றோம் என்பதை மறந்து விடக்கூடாது.

எத்தனையோ வீடுகள், கடைகள், கட்டடங்கள், கோவில்கள் இடிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் திருத்திப் புனர் நிர்மாணிக்க இந்த அன்னியச் செலாவணி உதவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வெளிநாடு செல்வோரில் 90 சத வீதத்தினர் சுகபோக வாழ்க்கைக்காகச் செல்லவில்லை. தங்கள் குடும்பப் பாரத்தைப் போக்கவும் சகோதரிகளின் சீதனப் பிரச்சனையைப் போக்கவுமே அவர்கள் வெளிநாடு செல்கின்றார்கள்.

வேலணை. இ. மோகூர்-

# எலுமிச்சை காய்க்கவில்லை என்றால்

## மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள்

**க- நரேந்திரன்**
விவசாய ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி

வீட்டில் உள்ள தேசிக் காய் மரங்கள் ஏன் காய்ப்பதில்லை? இம்மரங்களைக் காய்க்கச் செய்வதற்கு எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்?

மரங்கள் பூத்து காய்ப்பதற்கு ஒழுங்கான கத்தரித்தல் மேற்கொள்ள வேண்டும். கிளைகளை கத்தரிப்பதன் மூலம் புதிய கிளைகள் தோன்றி மரங்கள் பூத்துக் காய்க்கின்றன.

மரங்கள் பூத்து காய்ப்பதற்கு தாவரத்தில் இலைகளில் தயாரிக்கப்பட்ட மாப்பொருள் உரியக் கலங்கள் மூலம் வேர்த் தொகுதிக்கு கடத்தப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த தாவரத்தின் மேற்பட்டையில் உள்ள உரியக் கலங்களை மோதிரவளையம் போன்று வெட்டி எடுப்பதன் மூலம் தாவரத்தின் இலைகளில் தயாரிக்கப்பட்ட மாப்பொருள் அங்குலத் தொகுதிக்கு கடத்தப்படல் கட்டுப்படுத்தப்பட்டு தாவரத்தின் தண்டுத் தொகுதியில் புதிய கிளைதோன்றி மரங்கள்பூத்துக் காய்க்கின்றன.

மோதிரவளையவெட்டு:- ஓர் கூரிய கத்தியினால் தரையில் இருந்து ஒரு அடி உயரத்தில் 2 அங்குலம் அடிமரத்தைச் சுற்றி மேற்பட்டையை வெட்டி எடுப்பதன் மூலம் உணவு கடத்தப்படும் உரியக், கலங்கள் வெட்டி எடுக்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு வெட்டி எடுப்பதினால் மரம் பட்டுப் போகும் என்று எண்ணுதீர்கள். காரணம் மரத்தின் நடுப்பாகத்தின் ஊடாக வேர்க்கலம் மூலம் உறிஞ்சப்படும் கனிப்பொருள்கள், நீர் என்பன காழ்க்கலங்கள் மூலம் எடுக்கப்படுவதினால்பயிர்கள்படாது இருக்கின்றன. மோதிரவளைய வெட்டு வெட்டிய பின்னர் மரத்தை சுற்றி நீர் ஊற்ற வேண்டும்.

மரங்கள் பூத்துக் காய்ப்பதற்கு மரத்தைச் சுற்றி 1 அடி சுற்றுவட்டத்தில், ½ அடி அகலத்தில் 1 அடி ஆழத்திற்கு வெட்டி எடுக்கும் போது அதன் சுற்றுடலில் உள்ள வெட்டிய கிடங்கில் உக்கிய மாட்டெரு, ஆட்டெரு, தென்னைமட்டைகளை இட்டு நீர் ஊற்றுவதன் மூலம் மரம் நன்கு செழித்துப்பூத்துக் காய்க்கும்.

மரத்தின்சுற்றுடலில் (C.N.) காபன், நைதரசன் விகிதம் மாறுபாடு அடையும் போது மரம் பூத்துக் காய்க்கின்றது. இதற்கு மரத்தின் சுற்றுடலில் இலை, குழைகளைச் சேர்த்து எரிக்காது புகைக்கவிடும்போது வளிமண்டலத்தில் (C.) காபன் விகிதம் நைதரசன் விகிதத்திலும் கூடுகின்றது. இதனால் வளிமண்டலத்திலுள்ள காபன் நைதரசன் விகிதம் திடீர் என மாற்றம் அடையும்போது மரங்கள் பூத்துக் காய்க்கின்றன.

மரங்கள் பூத்துக் காய்ப்பதற்குத் தற்போது புதிய முறையில் கண்டுபிடிக்கப்பட்ட N: P: K 20: 20: 20 என்ற Hyponex Plant Food பாவிக்கப்படுகின்றது. இதனால் பயிரின் வளர்ச்சி துரிதப்படுவதற்கு இந்த இலை மூலம் உட்செலுத்தப்படும் தாவரபோசணைகளை 1½ தேக்கரண்டி நீரில் கலந்து தாவரத்திற்கு விசிறுவதன் மூலம் தாவரம் புதிய கிளைகள் விட்டு உடன் காய்க்கத்தொடங்கும். இதுவேஇன்றையபுதிய கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். இதனையே மேலை நாடுகளில் உள்ள விவசாயிகள் பயிர்களுக்குத் தெளித்து குறைந்த காலத்தில் கூடிய விளைச்சலைப் பெறுகின்றனர்.

## நித்திரையிலும் படிக்கலாம்!

நாம் நித்திரையிலும் படிக்கலாம் எனச் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் சோவியத் நிபுணர் ஒருவர் நாம் பகலில் கற்பதிலும் பார்க்க இரண்டு அல்லது மூன்று மடங்கு நித்திரையில் கற்றுக்கொள்ள முடியுமெனக் கூறுகிறார்.

இதைப் பரீட்சிக்க நீங்கள் செய்யவேண்டியது இவ்வளவு தான். நீங்கள் படுக்கப் போகும்பொழுது நீங்கள்கற்க வேண்டிய 30 அல்லது 35 சொற்கள் ஒரு 'ரேப்றெக்கோடர்' இல் பதித்து அச்சொற்களைப்பலமுறைஒலிக்க வையுங்கள். நீங்கள் படுக்கையை விட்டு எழும்பொழுது அச்சொற்களைப் பாடமாகச்சொல்லக்கூடியதாயிருக்கும்.

நித்திரைப்படிப்பு (Sleep Study) முறை ஒருமொழியைத் துரிதமாகக் கற்பதற்குப் பெரிதும் உதவுகிறது என இந்த சோவியத் நிபுணர் கூறுகிறார்.

(சேனு காணு)

WANTED

Chundikuli Girls' College
POST OF TEACHER

A Graduate Teacher to teach General Science for the Middle School and Botany for the Advanced Level Classes

Apply before the 10 th of April 1989.

PRINCIPAL.

(C/2059)

## மக்கள் தொண்டர் படை

1. இப்படை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் திரட்டப்படுகின்றது. கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்களிடமிருந்து இப்படைக்குத் தொண்டர்கள் தேவைப்படுகின்றனர்.

(அ) வயது : 01-04-89-ல் 18க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதினராக இருக்கவேண்டும்.
(ஆ) ஆகக்குறைய உயரம்: 5 அடி 4 அங்குலம்.
(இ) ஆகக் குறைந்த நெஞ்சளவு: 30 அங்குலம். [நெஞ்சு விரிவு இன்றி]
(ஈ) ஆகக் குறைந்த கல்வித் தராதரம்: 6ஆம் வகுப்பில் சித்தி

2. சம்பளமும் அலவன்சுகளும்

(அ) சம்பளம் : ரூபா 1590/- மாதாந்தம்
(ஆ) கஷ்ட அலவன்ஸ் : ரூபா 600/- மாதாந்தம்
(இ) வாழ்க்கைச் செலவுப்படி : ரூபா 260/- மாதாந்தம் முழுச் சம்பளத் தொகை: ரூபா 2450/- மாதாந்தம்
(ஈ) இலவச சீருடை; இவைகள் திரும்பவும் வழங்கப்படும்.
(உ) பொலிஸ் றிசேர்வ் படையினருக்கு வழங்கப்படுவது போன்று பென்சன், சேவைக் காலப் பணம் [Gratuity], லீவு, பதவி உயர்வு வாய்ப்புக்கள் வழங்கப்படும்.
(ஊ) சேவை மூப்பு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வு.

3. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சேவை ஆற்றுதல்

4. நஷ்ட ஈடும் நலன்களும்.

(அ) இலவச மருத்துவ சிகிச்சை
(ஆ) கடமையின்போது காயமுற்றால் உறுப்பினருக்கு முழுச் சம்பளமும் விசேட விடுமுறையும் வழங்கப்படும்.
(இ) கடமையின்போது மரணமடைந்தால் சார்ந்திருப்போருக்குத் தனியாராயின், ரூபா 75,000 மும், திருமணமானவராயின் 1 லட்சத்து 75 ஆயிரமும் கிடைக்கும்.
(ஈ) உடல் ஊனத்துக்கு ஒரு லட்சத்துக்கு மேற்படாத அலவன்ஸ் தொகை.

5 கடமைகள்

(அ) பொது ஒழுங்கை பாதுகாத்தல், குழப்பத்தைத் தடுத்தல்—அடக்குதல், பொதுச்சொத்தைபாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் பாதுகாப்பு சூழலை நிலைநிறுத்த உதவிபுரிதல்.
(ஆ) சமாதானத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்துவதற்கு அச்சுறுத்தலாக அமையும் தனிநபர்களையும், குழுக்களையும் உளவு பார்த்தல், கண்டறிதல், தடைக்காவலில் வைத்தல் ஆகியவற்றில் உதவி புரிதல்.
(இ) சமூக விரோதிகளை கைது செய்து நிராயுதபாணிகளாக்குவதில் உதவி புரிதல்.
(ஈ) யுத்தப் பொருட்களின் நடமாட்டத்தை தடுப்பதற்காக கள்ளக் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உதவி புரிதல்.
(உ) சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநிறுத்த உதவி புரிதல்.
(ஊ) இயற்கை சேதங்களால் ஏற்படும் அவசரகால நிவாரண நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் உதவி புரிதல்,

6. மக்கள் தொண்டர்படை என்பது பொதுசேவையைச் சேர்ந்த நடுநிலைமையான படை. அது எந்த அரசியற் கட்சியுடனுமோ கட்சி ஊழியருடனுமோ தொடர்புடையதல்ல. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள சுதந்திரமான மக்கள் தொண்டர்படை நிலையங்களிலிருந்து அது செயற்படும். இந்தப் படைக்கு சொந்த தலைமை அலுவலகம். ஆணை, (கமாண்ட்) அமைப்பும் இருக்கும்.

7. இத் தொண்டர்படையின் சொந்தப் பயிற்சி வசதிகள் ஸ்தாபிக்கப்படும்வரை இப் படைக்கு ஆரம்பத்தில் இந்திய அமைதிப்படை பயிற்சி அளிக்கும்.

8. மக்கள் தொண்டர்படையில் சகல பொது உணர்வுடைய, அர்ப்பணிப்பான, நடுநிலையான பிரஜைகளும் சேரலாம்.

9. மக்கள் தொண்டர்படை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், பொதுச் சொத்திற்கும், தனியார் சொத்திற்கும், பாதுகாப்பளிப்பதற்குமான மாகாண அரசபடையாகும்.

10. சேர்க்கும் திகதி:-

ஒவ்வொரு இடங்களிலும் சேர்க்கும் திகதி பற்றி அவ்வப்போது அறிவுறுத்தல்கள் தரப்படும்.

— மக்கள் தொண்டர்படை
கொமாண்டன்ற்
உத்தரவுப்படி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அளம்பில் செம்மலை மக்களுக்கு உணவு முத்திரை

முல்லைத்தீவு, ஏப். 5

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அளம்பில், செம்மலை மக்களுக்கு உணவு முத்திரைகளுக்கான பொருள்கள் முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்கக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

அத்துடன் கொக்கிளாய் கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி அகதிகளுக்கும் மூன்றுமாதமாக வழங்கப்படாத நிவாரணப் பொருள்களும் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-92)

## கொத்தணி உடற்பயிற்சிப்போட்டி

முழங்காவில், ஏப். 5

முழங்காவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி இன்று 5 ஆம் திகதி புதன் கிழமை கொத்தணி அதிபர் திரு. க. சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

COMPUTER DIPLOMA

**Computer Programming and Data Processing in Basic Language**

பயிற்சிக் காலம்: 3 மாதம். ஆரம்பம்: 12. 4. 89

(திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்)

சேரும்பொழுது செலுத்த வேண்டியது 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடியநேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (I. B. M. COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 11 - 04 - 89




**UNIKCO COMPUTER CENTRE,**

No. 5, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை,
(உப தபாற் கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம்.

(C/2060)



பிள்ளைகளே!
நீங்களும் அழகான 'BUNTY' புத்தகப் பைகளை வெல்லுங்கள்.
கவர்ச்சிமிக்க 1000 புத்தகப்பைகள் காத்திருக்கின்றன.




**மாதாந்தச் சீட்டிழுப்புகள் 4 உங்களுக்கு 4 வெற்றி வாய்ப்புகள்.**

அடுத்த 4 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் 250 அற்புதமான புத்தகப் பைகளை உங்களுக்குப் பரிசாக வழங்கவிருக்கிறோம்.

உங்கள் அபிமான 'பண்டி' நண்பர்களால் அலங்கரிக்கப்பட்ட இந்தப் புத்தகப் பைகளை நீங்கள் நிச்சயம் விரும்புவீர்கள்.

பாடசாலைக்கோ சுற்றுலாக்களுக்கோ எடுத்துச் செல்லக்கூடிய இந்த 'பண்டி' பைகளை வெல்வதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழ்க் காணும் கூப்பனை நிரப்பி ஸ்ட்ரோபெரி, கோலா, இஞ்சி, லெமன் அல்லது ஒரேஞ் சுவைகளில் வரும் 'பண்டி' டொபிகளின் 20 உறைகளையும் சேர்த்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

விதிகள் :

1. சகல பிரவேசப் பத்திரங்களும் 20 'பண்டி' டொபி உறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
2. ஒருவர் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் சமர்ப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொன்றும் தனித்தனிக் கடித உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
3. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது. எவ்வித கடிதத் தொடர்புகளுக்கும் இடமில்லை.
4. பிரவேசப் பத்திரங்களை அனுப்ப வேண்டிய முகவரி : 'பண்டி புத்தகப் பை வெகுமதி' த. பெ. 1225, கொழும்பு. பிரவேசக் கூப்பன்களுக்கான இறுதித் தினம் 1989 மே 31ம் திகதி.
5. எட்னா குரூப் கம்பனிகளின் அல்லது கிருண்ட் பி.ஜே.கே.ச. நிறுவனத்தின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் இதில் பங்குபற்ற முடியாது.
6. ஒவ்வொரு மாதாந்தச் சீட்டிழுப்பின் பின்னரும் வெற்றியீட்டுவோரின் பெயர்கள் சிலோன் டெயிலி நியூஸ், தினமின ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.

Licence No. S 692

கூப்பன்

பெயர் ____________

முகவரி: ____________

அண்மையிலுள்ள பிரதான நகரம் ____________

வியாபாரியின் பெயரும் முகவரியும் :

20 'பண்டி' உறைகளைச் சேர்த்து அனுப்ப மறவாதீர்கள்.



★ விக்னா ★
டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

O/L DAY CLASSES (8.30 - 1.30)
(புதிய பழைய பாடத்திட்டம் பிரிவு - 2)
EVENING CLASSES
பிரிவு - 3 (3.00 - 5.00)

ஆரம்பம்:- 05 - 04 - 89

ஆண்டு 10, 9, 8, 7, 6 ஆரம்பமாகிவிட்டன.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

விஞ்ஞானம்:- திரு. சூரி
தமிழ், சமயம்:- திரு. திருப்பதி
கணிதம்:- திரு. செல்வா
வர்த்தகம்:- திரு. கருணாகரன்
ஆங்கிலம்:- திரு. விஸ்வநாதன்
சமூகக்கல்வி:- திரு. சுந்தரமூர்த்தி

முக்கிய குறிப்பு: -கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.

[C-2126]


## பதவி வெற்றிடங்கள்

**சுகாதார சேவைகள் திணைக்களம், வவுனியா.**

முன்பயிற்சி மாணவ குடும்ப நல சேவையாளர் பதவி வெற்றிடங்களுக்கு (பெண்கள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

1. விவாகமாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.
2. 1 - 4 - 89 ல் 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. உயரம் 4 அடி 10 அங்குலத்திற்கு குறையாதிருத்தல் வேண்டும்.
4. கல்வித்தகைமைகள்:-
   க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றுள் தமிழ் மொழி, கணிதம் ஆகிய இருபாடங்களிலும் திறமைச் சித்தியும், வேறு இருபாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்களை மேற்கூறிய விபரங்களுடன் தயாரித்து சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர், வவுனியா என்ற விலாசத்திற்கு 20 - 4 - 89 க்கு முன்பாக அனுப்ப வைத்தல் வேண்டும்.

**டாக்டர் க. மாணிக்கம்,**
சுகாதார சேவை பிராந்தியப் பணிப்பாளர்,
வவுனியா.

[சி/2051]

## 1 ஆம் வருட நினைவுநாள்

மலர்வு:
17- 03- 1917

●

உதிர்வு:
05- 04- 1988



**திருமதி சஞ்சோ பிறிஜிற்றம்மா**
(சித்தம்மா)

இயேசுவே! எமது அன்னையின் ஆன்மாவை உமது அடியாரின் கூட்டத்தில் ஏற்றருளுமாறு மன்றாடுகின்றோம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

62/1 [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

(10277)


## உடன் வேலைக்கு ஆட்கள் தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள புளோவர் (Blowers) கெல்ப்பர் (Helpers) பபுளர் (Bubblers) போன்றவர்களும்

அனுபவமுள்ள (Bottle Machine) இயக்குநரும் கெல்ப்பரும் தேவை.

அனுபவத்திற்கும் வேலைத்திறமைக்கும் ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

16 — 19 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கும் தேவை.

நேரில் வரவும்:

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி.

(10442)


உ
சிவமயம்

## அஞ்சலிக் கூட்டம்

6- 2- 1989இல் அமரத்துவம் அடைந்த
**இளையதம்பி சண்முகம், இளையதம்பி சுப்பிரமணியம்**
அவர்களுடைய
**படத்திரை நீக்கமும், அஞ்சலிக் கூட்டமும்**

காலம்: 5 4 1989 புதன்கிழமை
நேரம்: முற்பகல் 9. 30 மணி
இடம்: சுருவில் ஐயனார் கோவில் அன்னதான மண்டபம்

### நிகழ்ச்சிகள்

முற்பகல் 9. 30 மணி ஐயனார் ஆலயத்தில் விசேட பூசை
10. 30 மணி படத் திரைநீக்கம்
11. 30மணி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை
நண்பகல்: 12. 30 மணி அன்னதானம்
பிற்பகல்: 3.30 மணி அஞ்சலிக் கூட்டம்

தலைவர்: திரு. சோ. தியாகராசபிள்ளை பண்டிதர் அவர்கள்

**அஞ்சலி உரை வழங்குவோர்:**

1. திரு. ச. மகாலிங்கம் (J. P) சைவத் தமிழ் பேரறிஞர்
2. திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
3. திரு. பொ. பொன்னுச்சாமி இளைப்பாறிய அதிபர் அவர்கள்
4. திரு. வை. கேதாரநாதன் B. Sc. அவர்கள், சரவணை
5. திரு. ந. நாகராசா அவர்கள், தலைவர், இந்து வாலிபர் சங்கம், புளியங்கூடல்.
6. திரு. ச. குமரேசையா பண்டிதர் அவர்கள் இளைப்பாறிய அதிபர் கரம்பொன்
7. டாக்டர் ஆ. பேரின்பநாதன் அவர்கள் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானம்

நன்றியுரை

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சுருவில் கிராம அபிவிருத்தி மன்றம்
சுருவில் மாதர் அபிவிருத்தி மன்றம்
சுருவில் இளைஞர் மன்றம்

(10275)

+
J. M. J.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
1917-04-14

●●●

ஆண்டவன் மடியில்:
1989 03-06



1989-04-05

**அமரர் ஆசீர்வாதம் சூசைமுத்து**
(கந்தர் வீரகத்தி)

எமது குடும்பத்தின் ஒளியாய் பாசத்தின் உறைவிடமாய் பாசத்தின் வழிகாட்டியாய் இருந்து வாழ வைத்த தெய்வமே! அமரராகி 31 ஆம் நாள் ஆயினும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள், பெறுமக்கள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

'சாந்தி இல்லம்'
1 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

உரிமையாளர்:
றோயல் சலூன்,
பசார் வீதி,
சிலாபம்.

(10377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**
இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்

**பொருள்:**
ஆலோசிக்காமல் மனைவி சொன்னதை எல்லாம் செய்ய விரும்புகிறவனுடைய வாழ்வு பெரிய அவமானமுள்ள காரியமாகித் தலைகுனியச் செய்யும்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
05 - 04 - 1989 க. பெ. இல: 23

## அமைதிக்கு அறிகுறி காணேம்!

பயிர் விளையுமா என்பது முளையிலேயே தெரிந்து விடும்! தேர்ச்சி பெற்ற விவசாயி, தனது அனுபவத்தைக் கொண்டு, அதனைக் கண்டுபிடித்து விடுவான்!!

இந்த நாட்டில் சமாதானம் உண்டாகுமா? அமைதி ஏற்படுமா? மக்கள் வாழ்க்கைக்குரிய பாதுகாப்பு உறுதி செய்யப்படுமா? — என்பவற்றுக்கான பதில்கள் அனுபவம் உள்ள அரசியல் அவதானிகளுக்கு இப்போது புரிந்திருக்கும்!

புத்தாண்டுக்கு முன்னர், நாட்டில்— மிகமிகக் குறிப்பாகத் தெற்கில்— அமைதி வரவேண்டும், இப்போது நிலவும் சண்டை நிலை ஒழிந்து சமாதானம் வரவேண்டும் என்ற நன்நோக்கோடு, அரசாங்கமும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகளும் கூட்டாகச் செயற்பட முனைந்தன.

வன்முறைகளைக் கைவிடுமாறு அரச எம். பிக்களும் எதிர்க்கட்சி எம்.பிக்களும் கூட்டாக ஓர் அறிக்கையை— வேண்டுகோளை — விடுப்பதே அந்தப் புத்தாண்டுச் சமாதான முயற்சித் திட்டமாகும்.

அப்படி ஓர் ஒற்றுமை உருவாகி, ''அமைதி திரும்ப ஒரு வேண்டுகோள்'' வெளியே வருமா என்பது ஆரம்பத்திலேயே சந்தேகத்துக்கு உரியதாகத்தான் இருந்தது.

இலங்கையில் எந்த விடயத்திலுமே உருவாகாத அரசியல் ஒற்றுமை இப்போது இலகுவில் எட்டப்பட்டு விடுமா என்பது உள்ளூர நிச்சயமற்றதாகவே இருந்தது. வழமைபோல, வழக்கத்தில் உள்ளதுபோல, ஏதோ ஒரு பக்கத்தார். ஒரு பக்கத்தால் இழுத்துக்கொண்டு போகமாட்டார்களா என்ற கேள்வியும் எழுந்தது.

அந்தச் சந்தேகம் பிழைத்துப் போகாதவாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன, வேண்டுகோளில் ஒப்பமிட பிகு பண்ணி வருகிறார். எதிர்க்கட்சி அரசுடன் சேராது தனித்து வேண்டுகோள் விடவேண்டும் என்பது தினேஷின் நிலைப்பாடு. அதனால் ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களும் சமாதான வேண்டுகோளில் கையொப்பமிடத் தயக்கம் காட்டி வருகிறார்கள்.

கூட்டு வேண்டுகோள் இலகுவில் செயலுருவம் பெறக்கூடியதல்ல என்று தெரிந்து தான், ஜனாதிபதி பிரேமதாசா முந்திக் கொண்டார் எனக் கருத இடமுண்டு. அதாவது தீவிரவாதிகளுக்கு பொதுமன்னிப்பு, நாடாளுமன்ற ஆசனங்கள் என்ற புதிய அறிவிப்பு அரசு — எதிர்க்கட்சி கூட்டு நடவடிக்கை தோல்வியுறும் என்று தெரிந்து, வெளிவந்த ஒன்றே எனக் கருத இடமுண்டு.

ஒரு வேண்டுகோளில் கூட்டாக கருத்து ஒற்றுமை இல்லாத நாட்டில் எப்படி ஐயா, அரசியல் ஒற்றுமை வரும்? சமாதானம் வரும்? அமைதி பிறக்கும்?

ஜனாதிபதி பிரேமதாசாவின் புதிய அறிவிப்பில் இருக்கும் ஒரு தொனிப்பொருளையும் இங்கு குறிப்பிட்டால் பொருத்தம் என நினைக்கிறோம்.

வன்செயல் புரிபவர்கள் நாடாளுமன்ற ஆசனங்களை, நாட்டின் அரசியல் அதிகாரப் பதவிகளை, இலக்கு வைத்துத்தான் நாட்டில் குழப்பத்தை உண்டாக்குகிறார்கள் என்பதை ஜனாதிபதியின் புதிய அறிவிப்புத் தொனிக்கிறது!

அந்த உள்வியாக்கியானம், மறைபொருள் சமரசத்தை உருவாக்க உதவாது. வன்செயலில் ஈடுபட்டிருப்போர், அந்த அறிவிப்பு தம்மை மக்கள் வேறுவிதமாகப் பார்க்க உதவும் என நினைத்து, சமரசத்துக்கு வரப் பின்னுக்கு நிற்பார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

மொத்தத்தில் தெற்கில் அரசியல் அமைதி உருவாகும் என்பதற்கான சரியான, உகந்த அறிகுறி எதனையும் காணேம். வேளைக்கு வேஷமிடும் அரசியல் தத்துவமே அங்கு கடைப்பிடிக்கப்படுவதால் உரிய அறிகுறியைக் காணுவது கஷ்டமே!

### ஹோமியோபதியின் தந்தை

## டாக்டர் சாமுவேல் ஹனிமன் 234ஆவது ஞாபகார்த்தவிழா

மானிப்பாய் ஏப்ரல் 5

வட இலங்கை ஹோமியோபதி சங்கமும், வட இலங்கை அக்குபஞ்சர் சங்கமும் இணைந்து நடத்தும் ஹோமியோபதியின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 234ஆவது பிறந்தநாள் ஞாபகார்த்த விழா 9ஆம் திகதி நடைபெற உள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடாதிபதி டாக்டர் எஸ். பவானி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

இலங்கை சித்த ஆயுர்வேதக் கல்லூரி அதிபர் டாக்டர் ஏ. வீ. இராசரத்தினம் வட இலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் சம்மேளனச் செயலாளர் வைத்திய சிரோமணி டாக்டர் ம. சோ சுந்தரம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

வட இலங்கை ஹோமியோபதி சங்க உறுப்பினர் டாக்டர் எஸ். குகநாதன் ஹோமியோபதிக்கு ஆற்றிய சேவைக்காகப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கம் அவர்களது ஆலோசகர் டாக்டர் ம. வேலுப்பிள்ளைக்கு கேடயம் வழங்கிக் கௌரவிக்கும்.

ஹோமியோபதி மீளாய்வு வகுப்புக்களில் பங்குபற்றியவர்களுக்குச் சான்றிதழ்களும் அக்குபஞ்சர் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்களும் வழங்கப்படும். (ச-90)

### இந்திய அரசியல்:

## ஜனதா தளம் அரசியல் அமைப்பில் வி. பி. சிங் தலைமைக்கு ஆபத்து

### பதவிப் போட்டியில் தேவிலாலும் ராமராவும்

புதுடில்லி, ஏப்ரல் 4

முக்கிய எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள ஜனதா தளம் கட்சியில் தலைமைப் பதவிக்கு போட்டி ஏற்பட்டிருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் வருகிற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனதா தளம் தலைமைப்பீடத்தில் பிளவு ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

பிரதமர் பதவிக்கு திரு. வி. பி. சிங்குக்கு போட்டியாக ஆந்திர முதலமைச்சர் ராமராவும் ஹரியானா முதலமைச்சர் தேவிலாலும் முன்னிற்பதாகக் கூறப்படுகிறது.

1977 இல் பதவிக்கு வந்த பின்னரே ஜனதா அரசு பதவிப் போட்டி காரணமாக 1979 இல் கவிழ்ந்தது.

ஆனால் ஜனதா தளம் கட்சியோ 1989 டிசம்பர் தேர்தலில் போட்டியிடும் முன்னரே பதவிப் போட்டி காரணமாக உடைந்துவிடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வருகிற தேர்தலில் இந்திரா காங்கிரஸைத் தோற்கடித்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பை எதிர்க்கட்சிகள் இழக்கப்போகும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனதா தளம் கட்சியில் பாரதிய ஜனதா கட்சியும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்து கொள்ளவில்லை.

காங்கிரஸில் இருந்து வெளியேறிய திரு. வி. பி. சிங்கின் ஆதரவாளர்களும் ஜனதாக் கட்சியில் உள்ள திரு. தேவிலால் ஆதரவாளர்களும் மட்டுமே அங்கம் வகிக்கின்றனர். (எ)

## அழகி பமேலாவுடன் தொடர்பா? மறுக்கிறார் ரொமேஷ் பண்டாரி

புதுடில்லி ஏப். 4

27 வயதான இந்திய அழகி பமேலாவுடன் தனக்குத் தொடர்பு இல்லை என்று இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டனில் அரசியல் நெருக்கடியை உருவாக்கி இருக்கும் இந்திய அழகி பமேலாபோர்டஸை எனக்குத் தெரியும். ஆனால் அவருடன் எனக்குத் தொடர்பு எதுவும் கிடையாது- என்று திரு. பண்டாரி சொன்னார்.

புதுடில்லியின் லெப்டினன்ட் கவர்னராக திரு. பண்டாரி தற்சமயம் பணிபுரிந்து வருகிறார்.

திரு. பண்டாரி மேலும் சொன்னதாவது;

1983 இல் லண்டனில் விருந்தொன்றில் பமேலாவைச் சந்தித்தேன். அச்சமயம் அவருடன் என்ன பேசினேன் என்பது எனக்கு நினைவில் இல்லை- இப்படி திரு.பண்டாரி சொன்னார்.

இதனிடையில் பமேலா விவகாரம் பிரிட்டனில் எழும்பியவுடன் திரு. பண்டாரி இரகசியமாக பிரிட்டன் சென்று பமேலாவைச் சந்தித்து தனது இரகசியங்களை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் என்று புதுடில்லியில் செய்திகள் அடிபட்டன.

அதுபற்றிக் கேட்டபோது, ''முட்டாள்தனமான செய்தி! நான் புதுடில்லியை விட்டுச் சென்றது உண்மை. ஆனால் பிரிட்டனுக்கு நான் செல்லவில்லை. ஸ்ரீநகர் சென்று வந்தேன்'' என்று சொன்னார்.

பண்டாரிக்குச் சொந்தமான லண்டன் வீட்டில்தான் பமேலா தங்கியிருந்தார் என்ற செய்திபற்றி விசாரித்தபோது-

''எனக்கு லண்டனில் வீடே கிடையாது. பின்னர் எப்படி பமேலா தங்கியிருக்க முடியும்?''- இப்படி 61 வயதான திரு. பண்டாரி திருப்பிக் கேட்டார். (உ-எ)

## உயிரைக் காப்பாற்றும் நாயின் தும்மல்!

லண்டன், ஏப்ரல். 4

மனித உடலில் நோயைக் கண்டு பிடிக்கும் சக்தி நாய்க்கு இருக்கிறதா?

இது பற்றி பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

'லன்செட்' என்ற சஞ்சிகையில் கூறப்பட்டிருப்பதாவது;

44 வயது பிரிட்டிஷ் பெண் ஒருத்தி ஒரு நாள் அமர்ந்து இருந்த சமயம் அவர் வளர்த்து வந்த நாய் அவரின் காலை நோக்கி அடுத்தடுத்துத் தும்மியது.

நாயின் அசாதாரணமான செயலைக்கண்ட அப்பெண் உடனே டாக்டரிடம் சென்று காலைக் காட்டினார். வைத்திய பரிசோதனை செய்த டாக்டர், புற்றுநோய்க்கட்டி காலில் இருக்கக் கண்டார்.

ஆரம்ப நிலையில் இருந்த அக்கட்டியை அகற்றஅறுவைச் சிகிச்சை உடனே செய்யப்பட்டது.

நாய்களிலும் சில இனம் நோயின் அறிகுறியை குறிப்பாக தோல் புற்றுநோயைக் கண்டறியும் மோப்ப சக்தி பெற்றிருப்பதாக வைத்திய நிபுணர் டாக்டர் வில்லியம்ஸ் தெரிவித்தார்.

தோல் புற்றுநோயைக் கண்டறிய நாயின் உதவியை நாடலாம் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார். (எ)

## ஜோர்ஜியா மாநிலத்தில் மீண்டும் இனக்கலவரம்

மாஸ்கோ, ஏப்ரல்.4

சோவியத் யூனியனில் ஜோர்ஜியா மாநிலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மத்திய அரசு பலப்படுத்தியிருக்கிறது.

அபேசியன் சுயாட்சிக் குடியரசில் வாழும் ஜோர்ஜிய இனத்தவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஜோர்ஜியா மாநிலத்தில் இருந்து பிரிந்துபோக அனுமதிக்கும்படி அபேசியன் குடியரசு கோரி வருகிறது.

இதை எதிர்த்து ஜோஜிய இனத்தவர்கள் இயக்கம் நடத்துகின்றனர். [எ]

## நமீபியாவில் சண்டையை நிறுத்த ஐ.நா தீவிர முயற்சி

ஐ. நா, ஏப்ரல் 4

பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி தென் ஆபிரிக்க அரசுக்கும் நமீபியாவின் சுவப்போ போராளிகளுக்கும் ஐ. நா. பொதுச்செயலாளர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

70 ஆண்டு காலமாக தென் ஆபிரிக்க அரசின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கும் திட்டம் கடந்த முதலாம் திகதி ஐ. நா. மேற்பார்வையில் ஆரம்பமானது.

அடுத்த நாள் சுவப்போ போராளிகள் அங்கோலாவினுள் இருந்து சட்டவிரோதமாக நமீபியாவினுள் நுழைந்ததாகக் கூறித் தென் ஆபிரிக்கப் படைகள் தாக்குதலை ஆரம்பித்தன.

போராளிகள் ஊடுருவல் இடம்பெற்றதை ஏற்றுக் கொண்ட ஐ. நா. பொதுச் செயலாளர், புதிய சண்டை காரணமாக நமீபியாவுக்கு சுதந்திரம் வழங்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது என்று அறிவித்தார். (எ)

## அரசியலில் ஸியாவின் மகன்

மறைந்த பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியா-உல்-ஹக்கின் 32 வயது மகன் எஜாஸுல் ஹக் அரசியலில் ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கிறார்

பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கில் சேர்ந்துள்ள இவர் பாகிஸ்தானில் இஸ்லாமியச் சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்த வேண்டும் என்று சொன்னார். [எ]

### சமயசந்நிதியில்.

#### தாவடிப் பிள்ளையார் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

தாவடி வேத விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 6ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

கொடியேற்ற வைபவம் காலை 9 மணிக்கு நடைபெறும்.

புத்தாண்டு தினமான 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ச)

#### ஸ்ரீ மகாமாரி அம்பாள் நவராத்திரி

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் கோயில் வசந்த நவராத்திரி விழா நாளை 6 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மகாசங்காபிஷேகம், சண்டிகாஹோமம் இலட்சநாமார்ச்சனை ஆகியவற்றுடன் நடைபெறும்.

இறுதி நாளன்று குளிர்த்தி நடைபெற்று மாலை அம்பாள் வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். (ச)

#### காரைநகர் கற்பக விநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை 6ஆம் திகதி வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறும்.

புதுவருட தினத்தன்று 14 ஆம் திகதி இரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-10)

#### கண்ணகை அம்மன் மஹோற்சவம்

புங்குடுதீவு, ஏப்ரல் 5

புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ கண்ணகை அம்மன் வருடாந்த மகோற்சவம் நாளை 6 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (க-131)

### தொழில் வாய்ப்புப் பெற்று

## வெளிநாடு செல்வோருக்கான செலவுகளை மக்கள் வங்கி ஏற்கும்

கொழும்பு, ஏப்ரல் 5

தொழில் வாய்ப்புப்பெற்று வெளிநாடு செல்லுபவர்களின் பூர்வாங்கச் செலவுகளுக்கு உதவும் திட்டம் ஒன்றை மக்கள் வங்கி தயாரித்து இருக்கிறது.

இந்தக் கடனுதவித்திட்டத்தின் கீழ் விமானக்கட்டணம், வைத்திய பரிசோதனைச் செலவு, தொழில் திணைக்களத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தமக்கள்வங்கிஉதவும்.

18 சதவீத வட்டியில் ஆகக்கூடியது 12 ஆயிரம் ரூபா வரை இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும்

விண்ணப்பதாரர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தாலோ அல்லது பணியகத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள ஏஜன்ஸியினாலோ சிபார்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

8 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான கடன்பெற பெற்றோர், கணவன் அல்லது மனைவி அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் உத்தரவாதியாக இருந்தால் போதும். ஆனால் விண்ணப்பதாரர் மக்கள் வங்கியில் வதிவிடமற்ற வெளிநாட்டு கரன்ஸி கணக்கு ஒன்றை ஆரம்பித்து வேலை கிடைத்தவுடன் 24 மணித்தியாலங்களில் கடனைத் திருப்பிச் செலுத்துவதாக உத்தரவாதமளிக்க வேண்டும்.

திருப்திகரமான முறையில் கடன் திருப்பிச் செலுத்தப்பட்டால் 3 சதவீத வட்டிச் சலுகை வழங்கப்படும்.

இக்கடனுதவித் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு மக்கள் வங்கிக் கிளைகள் அமுல் நடத்தும். (இ-எ)

## மருந்து இறக்குமதிவரியை ரத்துச் செய்யச் சிபார்சு

இறக்குமதி செய்யப்படும் ஆங்கில மருந்து வகைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள 5 சத வீத வரியை ரத்துச் செய்யும்படி ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சு அதிகாரிகளின் உயர்மட்ட மாநாடு ஒன்றில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது.

மருந்துவகைகளைத்தயாரிக்க பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றின் மீது 15 சத வீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதையும்ரத்துச்செய்யும்படி ஜனாதிபதிக்கு சிபார்சு செய்வது என்று மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

### மலையகத்திலும்

## கரும்புலிகள் முன்னணி?

கொழும்பு, ஏப்ரல். 5

மலையகத்திலும் 'கரும்புலிகள் முன்னணி' என்ற பெயரில் தீவிரவாத இயக்கம் ஒன்று உருவாகியுள்ளதா?

இச்சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் எழுந்து உள்ளது.

மலையகத்தில் அரசியல் தொடர்புடைய சிலருக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று கூறப்படுவதைத் தொடர்ந்தே இச்சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அக்கடிதங்களில் ''மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் மாற்று அரசியல் கட்சிகளில் அங்கம் பெற்றிருந்தால் 10 நாட்களுக்குள் அக்கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து விலகிக் கொள்ளவேண்டும்''—இப்படி எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி தகவல் எதுவும் தெரிவிக்க நுவரெலியா பொலிஸ் அதிகாரி மறுத்துவிட்டார். (ஓ- எ)

## மீன்பிடித் தடை உத்தரவு வாபஸ்

கடந்த வெள்ளிக்கிழமை அக்கு நீரிணைப் பகுதியில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு கடந்த சனியன்றே வாபஸ் பெறப்பட்டது.

பிரஜைகள் குழுவினரும், மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் படையினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே தடை உத்தரவு வாபஸ் பெறப்பட்ட து.

என்னும் இதன்பின்னரும் மயிலதனை, ஆதிகோவிலடி, பொலிகண்டிப் பகுதிகளில் மீன்பிடிக்கச் சென்றோர் திருப்பியனுப்பப் பட்டதாகவும்–

பொலிகண்டியில் மீனவர் படகு மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், பிரஜைகள் குழு மற்றும் மீனவர் சங்கங்களிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-160)

## குப்பைக்குள் குண்டு!

### ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப் 5

நாவற்குழிப் பகுதியில் குப்பைக்குள் கிடந்த குண்டு வெடித்து ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவரான மார்க்கண்டு சிவராசா (வயது 31) யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

## ஆஷாரியாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 5

கந்ததாசக்குருக்கள் திருஞானசம்பந்தசர்மாவுக்கு நயினை, பிரதிஷ்டா பூஷணம் சாமிநாதபரமேஸ்வரக் குருக்களால் கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவபூதவராஸ்வாமி தேவஸ்தானத்தில் இன்று புதன்கிழமை காலை 6 மணி அளவில் ஆஷாரியாபிஷேகம் நடத்தப்படும். (இ)

## முன்னாள் லஞ்ச ஆணையாளர் தப்பினார்

கொழும்பு, ஏப்ரல் 5

முன்னாள் லஞ்சத் திணைக்கள ஆணையாளர் இயன் விக்ரமநாயக்கா சனிக்கிழமை அதிகாலை இனந்தெரியாதவர்கள் சிலர் நடந்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்தப்பினார்.

அச்சம்பவத்தின்போது அவரின் வீட்டு வேலையாள் பிரியந்த (28 வயது) என்பவர் மரணமானார்.

திரு. விக்ரமநாயக வேறு அறை ஒன்றில் சம்பவத்தின் போது இருந்ததால் உயிர் தப்பினார் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## ஓவியக் கண்காட்சி

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சாவகச்சேரி வடக்கு கொத்தணியின் ஓவியக் கண்காட்சி கொத்தணி அதிபர் திரு க. சி. குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

வடமாகாண விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு சி. பி. கணேசலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்தார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுகொள்ள நாடுங்கள்

# உதயன்

05 - 04 - 1989 புதன்கிழமை

எந்நிறம் வர்ண நிழற்படப் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சாவகச்சேரி
உதயன் - சஞ்சீவி வாசகர்களுக்கு
ஓர் நற்செய்தி!
உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை உங்கள் வீடுகளில் காலையிலேயே நேரில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி:
ஜே. எஸ். ரி. ஸ்ரேஷனறி
இல 15, கண்டி வீதி,
[நீதிமன்றத்துக்கு முன்பாக]
சாவகச்சேரி.

பிரயாண ஒழுங்குகள்

★ Saudi Arabia

Electronic Engineer - 3000 — 4000 S. R.
Plumber — 1350 S. R.
Mechanics — 1350 S. R.
Electronic Technician — 1500 S. R.
Lift Technician (Mech & Elect) — 1000 S. R
A/C Technician (Chiller Type) — 1000 S. R

★ Abudhabi

Carpenters - தச்சுத்தொழிலாளர் 10
Masons - மேசன் 5
Painters - பெயின்ரர்ஸ் 5
One month ஒரு மாதம்

★ Kuwait

Laboures 50 — 45 K. D. + No food (3 Weeks)

★ Saudi Arabia

Farm Labourers 30 — 400 S. R. + Food உடனடிப் பயணம்
Labourers 60 — 600 S. R. (2 மாதத்தில் பயணம்)
Labourers 10 — 350 + 100 S. R. (உடனடிப் பயணம்
Poultry farm Labourers 36 - 400 S. R. + Food ஒரு மாதத்தில் பயணம்)

★ சவூதி அரேபியா

| | |
|---|---|
| A/C Service man | — 4 |
| A/C Technician | — 6 |
| Chiller Foreman | — 1 |
| " Technician | — 3 |
| " Service man | — 10 |
| " Operator | — 3 |
| " Helper | — 4 |
| Cold room Refrigeration Technician | — 3 |
| Driver | — 8 |
| H V. A. C Technician | — 4 |
| Laundryman | — 4 |
| Auto mechanic | — 2 |
| Chief security Guard | — 1 |
| Elevator Service man | — 2 |
| Painters | — 5 |
| Pest control Operator | — 3 |
| Lands Caping Foreman | — 2 |
| House Clearing boys | — 80 |
| Tilelayer | — 6 |
| Tilelayer Helper | — 2 |
| Wall paper & Capet Layer | — 3 |
| Agriculture Engineer | — 1 |

★ Kuwait

| | |
|---|---|
| Electronic Technician | — 10 |
| Generator Mechanics | — 10 |
| H. V. Drivers | — 50 |

உடனடியாக நேரில் வரவும்:
ஆசிரியர் அ. தவச்செல்வம்
B. Sc (Hons)
நெல்லியான் வீதி, சுழிபுரம்.
[C-2137]

## மருத்துவத்துறை பேராசிரியர்களை இந்தியாவிலிருந்து அழைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஏப் 5

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவும் மருத்துவப் பேராசிரியர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்காக இந்தியாவிலிருந்து பேராசிரியர்களை அழைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அமைதிப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் யாழ். பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தபோது இது குறித்து அவருடன் பல்கலைக்கழக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளர் பற்றாக்குறை இருப்பதாகவும் ஆகக் குறைந்தது மூன்று மாத காலத்துக்காவது மருத்துவப் பேராசிரியர்கள் இந்தியாவில் இருந்து வந்தால் அது நிலைமையைப் பெரிதும் சீர்படுத்தும் என்றும் இந்தியத் தளபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். செயலகத்தில் பிறப்பு, இறப்பு சான்றிதழ் உடனுக்குடன் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். செயலகத்தில் அடுத்த சில வாரங்களில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களை விண்ணப்பங்களைக் கொடுத்த அதே நாளிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் தகவலைப் பிறப்பு, இறப்புச் சான்றிதழ் விநியோகத்திற்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

தற்பொழுது மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் வெகுவிரைவில் வழங்கப்பட்டுவிடும்.

அடுத்த வாரத்தில் மார்ச் 15 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

அதுவும் முடிந்த பின்னர் பிறப்பு இறப்புச் சான்றிதழ்களை விண்ணப்பிக்கும் அதே நாளில் உடனுக்குடன் வழங்கும் முறை ஆரம்பிக்கப்படும் என்று அந்த அதிகாரி சொன்னார். [ஒ-9]

## ஹர்த்தாலை முறியடிப்பதில்...

அம்புலன்ஸுகள் அனைத்தும் சேவைக்கு ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இன்று ஐந்தாம் திகதி புதன்கிழமை, பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்படும் என்று அரசு வட்டாரங்களில் இருந்து அறியவந்தது.

இதேவேளை ஜே. வி. பி.யின் கோட்டை எனக் கருதப்படும் தென் மாகாணத்தில் ஹர்த்தாலுக்கான முஸ்தீபுகள் தீவிரமாக இருந்தன.

பல இடங்களிலும் வீதித் தடைகள் போடப்பட்டுள்ளன. அவற்றை அகற்றுவோர் தண்டனைக்கு ஆளாவார்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல மத்திய மாகாணத்திலும் ஹர்த்தாலுக்கான முஸ்திபுகள் தீவிரமடைந்திருந்தன.

மேற்கண்ட இரண்டு மாகாணங்களிலும் பாதுகாப்பு மிகப் பெருமளவில் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. [அ-உ-10]

## இந்தியத்-----:

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்திரப்பாட்டுக்கும் இந்திய-பாகிஸ்தான் உறவுகள் முக்கியமானவை.

பாகிஸ்தானுடனான எமது உறவுகள் சிக்கலான நிலையில் உள்ளன. அதனால்தான் பிரார்த்தனைகளுடன் செல்கிறேன்.

பாகிஸ்தான் அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் சமயத்தில் நான் அங்கு செல்கின்றேன்— என்று திரு. டிக்ஸிற் சொன்னார்.

## அ. தி. மு. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பினர்களை வெளியே செல்லும்படி கூறவே, கருணாநிதி அரசு ராஜினாமாச் செய்யவேண்டும் என்று கோஷமிட்டபடி அவர்கள் வெளியேறினர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் அ. தி. மு. க. உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டது தெரிந்ததே. [ஒ-எ]

## இந்திய....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதை அடித்துக் கூறுகிறோம்.

இன்று எமது மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியப்படை அங்கு, இங்கு என்று இல்லாதபடி எங்கும்— எல்லாக் கிராமங்கள்தோறும் நிலைகொண்டிருக்கிறது.

இதனால் இந்திய ஜவான்களின் தலையீடு இல்லாமல் நாளாந்த வாழ்க்கையின் எந்த நடவடிக்கையையும் செய்ய முடியாத நிலையில் எமது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எமது பிரதேசத்தில் இடம்பெறும் தேவையற்ற சண்டையால் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்களே.

ஆகையினால் எல்லா இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்தி—

இராணுவம் பரந்துபட்டு திறந்திருக்கும் முகாம்களைமூடி சில முக்கிய இராணுவ மையங்களுக்குத் திரும்ப வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இதனை முதற்படியாக செய்வதன் மூலம் மட்டுமே எமது மக்களின் பால் உள்ள தமது நல்லெண்ணத்தை இரு அரசுகளும் காட்ட முடியும் என்பது எமது கருத்து.

இது குறித்தே இரு தடவைகள் திங்களன்றும் செவ்வாயன்றும் இந்தியத்தூதருடன் பேசினேன்.

இப்படி திரு பாலகுமாரன் சொன்னார் [உ]

## ஈ.ஐ. முன்னணி------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டதாக அறியவந்தது

ஈரோஸ் பிரதிநிதிகள் கடந்த மார்ச் ஆரம்பத்திலும் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

அப்போது தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என உறுதியளிக்கப்பட்டதாகவும் —

ஆனால் அது தொடர்ந்து தாமதப்படுத்தப்பட்டு வந்ததாகவும்—

தாங்கள் அதுபற்றி இம்முறை ஜனாதிபதியிடம் வலியுறுத்திப் பேசியதாகவும் திரு. பாலகுமாரன் சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

''இந்த விடயத்தில் சில சட்டப் பிரச்சினைகள் இருப்பதால் தடங்கல் ஏற்பட்டதாக ஜனாதிபதி எம்மிடம் தெரிவித்தார்,

''தாம் இந்த விடயத்தை உடனடியாகக் கவனிப்பதாகவும் — முக்கியமாக தண்டிக்கப்பட்ட கைதிகள் எதிர்வரும் 7ஆம் திகதி விடுவிக்கப்படுவார்கள் என்றும்—ஜனாதிபதி எங்களிடம் உறுதியளித்துள்ளார்,

இந்த நிகழ்ச்சிக்காகவே நாம் 7ஆம் திகதிவரை கொழும்பில் தங்கிநிற்க முடிவு செய்துள்ளோம்'' — இப்படி திரு. பாலகுமாரன் மேலும் சொன்னார். (உ)

## உப தபாலதிபர் காலமானார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

சுண்டுக்குளி தபால் அதிபர் திரு. ந. வீரசிங்கம் நேற்று மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 53.

இவர் சாவகச்சேரி, சங்கானை, சுழிபுரம், யாழ்ப்பாணம், அநுராதபுரம் தபாலகங்களிலும் முல்லைத்தீவு தபால் அத்தியட்சகர் அலுவலகத்திலும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

AL/91

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

புதன், வெள்ளி
வர்த்தகம்
திரு. தேவா
இந்துநாகரிகம்
திரு. சிவ. மகாலிங்கம்
[C/2111]

கொக்குவில் இந்துக் கல்லூரி
அபிவிருத்திச் சபை வருடாந்தப்
பொதுக் கூட்டம்

காலம் :- 09-04-1989 ஞாயிறு மு. ப. 10 மணி
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி

பெற்றோர், ஆசிரியர் அழைக்கப்படுகின்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.
1989-04-05 (C/2120)
க. வை. சிவநேசன்
செயலாளர்.

## பெரும் சதித் திட்டம் இந்திரா கொலை பின்னணியில்

### அமைச்சர் சிதம்பரம் தகவல்

புதுடில்லி, ஏப்ரல் 5

முன்னாள் பிரதம மந்திரி இந்திரா காந்தி கொலைச் சம்பவத்தின் பின்னணியில் இடம்பெற்ற பெரும் சதித் திட்டத்தை விசேட புலனாய்வு விசாரணைக் குழு கண்டுபிடித்திருப்பதாக உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இச்சதியில் சம்பந்தப்பட்ட சில முக்கிய நபர்களுக்கு எதிராகத் தகுந்த நீதிமன்றம் ஒன்றில் இந்தக் குழு விரைவில் குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்யும் என்றும் இணை அமைச்சர் திரு. சிதம்பரம் சொன்னார்.

தக்கர் கமிஷன் குற்றஞ்சாட்டிய 21 அதிகாரிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

## ஆங்கில--- --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சு விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தைப் பணித்திருக்கிறது. [ஒ—எ]

[முந்திய செய்தி 7 ஆம் பக்கத்தில்]

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி சேனாதிராஜா

(கட்டட ஒப்பந்தக்காரர்)

66/17, பிறவுண் றோட், 5 ஆம் லேனைச் சேர்ந்த சின்னத்தம்பி சேனாதிராஜா அவர்கள் 04-04-89 இல் காலமாகிவிட்டார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், நித்தியரஞ்சிதன், யோகராஜா, தனேந்திரன், ஸ்ரீரஞ்சினி, சுமங்கலி, வதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கவேல், தேவிகா, வசந்தன் ஆகியோரின் மாமனாரும், தங்கவேலு, தையலம்மா, தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் சகோதரரும், றெஜினாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-04-89 புதன்கிழமை (இன்று) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 4 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் கனக்கமரத்தடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தங்கவேல்
(மருமகன்)
(10285)

### ஆறுமுகம் இராஜபட்சம்

(பொறியியலாளர்)

பொறியியலாளர் ஆறுமுகம் இராஜபட்சம் காலமாகிவிட்டார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய பெருந்தெரு திணைக்களப் பணிப்பாளரும், யாழ். மாவட்ட மந்திரியின் தொழில் நுட்ப ஆலோசகருமாகிய இராஜபட்சம் 31-03-1989 அன்று காலமாகிவிட்டார்.

இவர் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வாமனதேவி, சுலோஜனதேவி (லண்டன்), ஈஸ்வரபட்சம் (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், கிளிநொச்சி), விஸ்வபட்சம்) தொழில் நுட்பவியலாளர், லங்கா சீமேந்து லிமிட்டெட், காங்கேசன்துறை), யாழினிதேவி, ஸ்ரீஇரங்கபட்சம் (பொறியியலாளர், லண்டன்), ராஜினிதேவி, உருத்திரபட்சம் (மாணவன், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன் (பொறியியலாளர், தென் ஆபிரிக்கா), கோபாலன் (கணக்காளர், லண்டன்), நந்தினி (விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், கிளிநொச்சி), புஷ்பராணி, கதிர்காமநாதன் (உரிமையாளர், பிரகாஷ் ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்), கணேஷ்குமார் (பொறியியலாளர், நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரம்மன், ஜெயந்தினி (லண்டன்), விசாகரன், பார்த்தீபன், ஹரிதாஸ், சிந்துஷா ஆகியோரின் அருமைப் பேரனும், டாக்டர் கனகரட்ணம், காலஞ்சென்ற வேலாயுதர் ஆகியோரின் அருமைச் சகோதரரும், திருவாதலூரர், இரத்தினராசா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் திங்கட்கிழமை (03-04-1989) தொல்புரம், சுழிபுரத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''இராஜகிரி''
தொல்புரம், சுழிபுரம்
தகவல்:
இராஜேஸ்வரி
[10264]

### நமசிவாயம் வீரசிங்கம்

நீர்வேலி நமசிவாயம் வீரசிங்கம் (தபால் அதிபர், சுண்டுக்குளி) 4-4-89 அன்று இறைவன் திருவடி சென்றடைந்துள்ளார். அன்னார் புஷ்பதேவியின் அன்புக் கணவரும், யசோதாவின் (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆசைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந. பஞ்சாட்சரம்
(C/2068)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 05 - 04 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org